உ

குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 4 } 1905௵ மார்ச்சு௴ { புத்தகம் 3

வித்தை IX.

[முன்தொடர்ச்சி.]

பிரதம பாடசாலைக் கல்வியின் சீர்கேடான நிலைமையையும் அதனைச் சீர் திருத்தவேண்டிய முறைகளையும்பற்றி முன் சஞ்சிகைகளில் எழுதினோம். இச்சஞ்சிகையில் மத்தியதர பாடசாலைகளின் கல்வியைப்பற்றிப் பேசப்புகுவோம். மத்தியதர பாடசாலைகளை இருவகையாகப் பிரித்து முதல் வகையில் முதல் மூன்று வகுப்புக்கள் அல்லது பாரங்களைப்பற்றியும் இரண்டாவது வகையில் நான்கு, ஐந்து, ஆறு பாரங்களைப்பற்றியும் பேசுவோம். முதல் வகை பாரங்களில் தற்காலம் கற்பிக்கப்படும் பாடங்கள் ஆங்கிலம், தமிழ் அல்லது சம்ஸ்கிருதம் கணக்கு, பூகோளம், சரித்திரம் ஆகிய இவைகளே. சிற்சில பாடசாலைகளில் படமெழுதலும் கற்பிப்பதுண்டு. ஆங்கிலம் கற்பிப்பதில் சிற்சில குறைகளுண்டு. முதல் பாரத்தில் ஆங்கில இலக்கணம் அநேகமாய் இலக்கியத்துடன் வாய்மொழியாகவே கற்பிக்கபட வேண்டியிருக்கப் புத்தக ரூபமாகவே அதிகம் கற்பித்து வருகின்றனர். இது நிற்க. தமிழ் இலக்கணத்தை அநுசரித்தே ஆங்கில இலக்கணம் கற்பிக்க வேண்டிய முறையைத் தவிர்த்து ஆங்கிலத்திலேயே கற்பிப்பதால் ஆங்கில இலக்கண ஞானம் சரிவரப் பிள்ளைகளுக்குப் பிடிபடுகிறதில்லை.

பாஷா ஞானம் சரிவர ஏற்படாது முறைபிறழ்ந்து சில சப்தஜாலமட்டும் கூறுவது பிள்ளைகளுடைய பெரும்பான்மையான வழக்கமாகப் போய்விட்டது. இது நிற்க. ஆங்கிலத்தில் வியாசம் (Composition) கற்பிக்குங்கால் பொருட்பாடம்போலவே பொருள்களைச் சுட்டிக்காட்டி பிள்ளைகளைச் சிறு வாக்கியங்கள் செய்யும் வண்ணம் கற்பிப்பதை யொழித்து உபாத்தியாயர் தாமியற்றிய சில வாக்கியங்களைக் குருட்டுப்பாடம் பண்ணும் வண்ணம் பிள்ளைகளை நிர்ப்பந்தப்படுத்தி ஞானசூனியராக்கிவிடுகின்றனர். இவ்விரண்டு குறைகளை நிவிர்த்தி செய்வதுடன் சம்பாஷணையிலும் மாணாக்கர்களைத் தினந்தோறும் பயிற்றிவரின் மிக்க அநுகூலமென்பதற் கையமில்லை. தமிழ் விஷயத்திலும் இலக்கணமும் இலக்கியமும் ஒருங்கே கற்பிக்கப்படவேண்டும். இலக்கண விதிகளை மாணாக்கர் குருட்டுப் பாடம் பண்ணு முறை இருக்கும் வரை சிறிதும் பாஷாஞானம் ஏற்படப் போகிறதில்லை. தமிழில் வியாசம் எழுதப் பயிற்றுகிற வழக்கம் இவ்வகுப்புக்களில் சரிவர அநுசரியாத குறைவால் மேல் வகுப்புக்களில் மாணாக்கர்கள் ஒரு விஷயத்தைப்பற்றி ஏதேனும் ஒன்று எழுதத் தொடங்குங்கால் விழிக்கிறார்கள். இதுநிற்க. கணக்கு விஷயத்தில் மனக்கணக்கையே இவ் வகுப்புக்களில் முற்றிலும் ஒழித்து எல்லாவற்றையும் கற்பலகைமூலமாகவே போடும்படி செய்வதால் கணக்கில் சரியான ஞானம் ஏற்படுகிறதில்லை. கால், அரை, முக்கால், மாகாணி, அரைக்கால், பெருங்குழி, சிறுகுழி முதலிய முக்கிய வாய்பாடுகள் இவ் வகுப்புக்களில் தெரிவது இன்றியமையாதது. சரித்திரங் கற்பிக்குங்கால் படங்கள் மூலமாகவும் சித்திரங்கள் மூலமாகவும் விஷயங்களை விளக்கி மாணாக்கர்களை, அவ்வாறு கண்டு கேட்ட விஷயங்களை முறைப்படுத்திக் கூறச்செய்யின் நலமாயிருக்கும்.

அவ்வாறின்றி அநாவசியமாய் வருஷங்களையும் சங்கதிகளையும் மனப்பாடமாக ஒப்புவிக்கச் செய்தலே பெரு வழக்கமாக இருக்கின்றது. இவ்வகுப்புக்களில் இப்பாடம் சுயபாஷையிலேயே முற்றிலும் இருத்தல் நலம். ஆங்கிலத்தில் கற்பிப்பதால் சரிவர மாணாக்கர்கள் விஷயங்களை எழுதச் சக்தியற்ற

வர்களாய்க் குருட்டுப் பாடத்தையே அனுசரித்துப் புத்தியைக் கிலேசப்படுத்திக் கொள்ளுகிறார்கள். மேலும் ஜில்லாவைப் பற்றிய சரித்திரங்களும் முதல் பாரத்திலாவது தெரியவேண்டும். அதன்பின் இராஜதானி சரித்திரம், பின் தேசசரித்திரம் கற்பித்தல் நன்மையைப்பயக்கும். சரித்திரமும் பூகோளமும் ஒருங்கு சேர்ந்து கற்பிப்பதை விட்டு இரண்டு பாடமாகக் கற்பிப்பது சிறிதும் யுக்திக்கும் புத்திக்கும் பொருத்தமாகத் தோற்றவில்லை.

தற்காலம் ஆங்கிலபாடசாலைகளில் கற்பிக்கப்பட்டு வரும் பாடங்களில் மிகவும் கேவலமாய்க் கற்பிக்கப்பட்டுவரும்பாடம் பூகோளமென்றே சொல்லலாம். அதனை ஒரு சாஸ்திரப்பாடமாக்குவதைவிட்டு நாமாவளியாகமட்டும் ஆக்கிவருவது வித்தியாபிவிருத்திக்குப் பெருங்குறைவை யுண்டாக்குகின்றது எனக் கூறுவோம். தற்காலமிருக்கும் வண்ணம் எல்லா ஆசிரியர்களும் பூகோளம் கற்பிக்கத்தகுதியுடையவர்கள் என்று நாம் கூறத் துணியோம். சிற்சிலரே அதனைத்தக்கவண்ணம் போதிக்கத் தக்கவராவர்கள். அப்பாடம் சரிவரக் கற்பிக்கப்பட வேண்டிய தற்குப்போதுமான சாதனங்களும் பாடசாலைகளில் கிடையா. இதுவிஷயத்தில் நாம் போதகாசிரியர்களைமட்டும் குறை கூறத் துணியோம். பெரும்பான்மையான குறைவு பாடசாலையைநடத்துகிற மானேஜர்களிடத்தும் தலைமை உபாத்தியாயரிடத்துமே இருந்துவருகின்றது. இவ்வதிகாரிகள் தக்கசாதனங்களைத்தேடிக்கொடுப்பதில்லை. பூகோளம் ககோளம்முதலிய உருண்டைவடிவங்கள் அநேகம் பாடசாலைகளிற் கிடையா. தக்கதேசபடங்களையும்வாங்கித்தருவதில்லை. இரண்டொன்று இருந்தாலும் பழைய படங்களாகவும் கிழிந்தவைகளாகவுமிருந்துவருகின்றன. ஒரு தேசத்துக்கு ஒருபடத்துக்குமேல் இருப்பது அபூர்வம். பல வகுப்புக்களிருக்கிற பாடசாலைகளில் வகுப்புக்கு ஒரு படம் இருத்தல் நலம். தேசபிரிவுகளின் படங்களை வாங்குகிறவழக்கமேயில்லை. இல்லாவிடினும் தக்கவர்களைக்கொண்டு அத்தேச பிரிவுகளைப் பெரும்படங்களில் அமைத்துக் கொடுப்பதுமில்லை. சிறு சிறு வெற்றுப் படங்கள் ஏராளமாய்த் தயாரித்துப் பாடங்

களில் பிள்ளைகளை உபயோகிக்கச் செய்தல் பெரிய சாதனமாகும். இதனைப்போல் பிள்ளைகளுக்கு இப்பாடத்தைச்சுலபமாய்ப்புகட்டக்கூடியவழி வேறொன்றிருப்பதாக எமக்குத் தோற்றவில்லை. இது நிற்க.

தேசக்காட்சியின் படங்களும், நகரங்களின் படங்களும் அவ்வத் தேசங்களில் காணப்படும் மிருகங்கள், விருக்ஷங்கள் தானியங்கள் மற்றுமுள்ள அதிசயச் சரக்குக்கள் இவைகளைச் சேகரித்துக் கொடுப்பது பாடசாலை நடாத்துவோரின் கடமை. வெங்காரம், ஆண்டிமொனி என்ற நாமங்களைப் பிள்ளைகள் தினசரி கேட்டு வருகிறார்களே ஒழிய அப் பதார்த்தங்கள் கறுப்போ சிவப்போ என்பது உபாத்தியாயர்களுக்கே தெரியுமோ என்பது சந்தேகம். ஒவ்வொரு பள்ளியையும் அடுத்து ஒரு சிறு பொருட் காட்சிசாலை இருத்தல் இன்றியமையாதது. மாணுக்கன் வாழ் நாளில் என்றும் பயன்படாத பட்டணங்கள், ஆறுகள், மலைகள் இவைகளின் பெயர்களை வாசிக்கச் செய்வது எதற்காக? டென்கிரிநார், பொபகாடபிடல், குவாடியானு, ஙியூஷாடல், பாங்கிப்பூர் முதலிய பெயர்களை ஒரு பையன் அறிவதால் என்ன இலாபம் அடைகிறான்? இவ் விராஜதானியில் வசிக்கும் மாணுக்கர்களுக்கு இத்தேசத்துச்சரித்திரம், கைத்தொழில், வியாபாரம் இவை சம்பந்தமான பெயர்களைத் தவிர்த்தும், பிறதேசங்களிலும் முக்கியமாய் மேற்கூறிய விஷயங்கள் சம்பந்தமான பெயர்களைத் தவிர்த்தும் வேறு பெயர்கள் எதற்குத் தெரியவேண்டும்? புத்திக்குச் சுமைதானே. இங்கிலாந்திலுள்ள ஒவ்வொரு சிறு கிராமத்தின் பெயரையும் நம் நாட்டுப் பையன் அறிவதால் அவனுக்கு யாதுபயன்? சரித்திரம் வாசிக்குங்கால் படங்கள் மூலமாய் அப்பெயர்களை அவ்வப்போது அறிந்துகொள்ளக் கூடாதா? இதற்காக நாமாவளிகளை நெட்டுருப்போட்டுப் புத்தியைக் கிலேசப் படுத்திக்கொள்ள வேண்டுமா? ஆகையால் இவ்விஷயத்தில் அந்தந்தத் தேசத்துப் பாடசாலைகளுக்குத் தக்கவண்ணம் புத்தகங்கள் அநாவசியமான பெயர்களில்லாமல் தயார் செய்யப்பட்டுத் தக்க படங்களுடன் ஏற்படவேண்டும்.

ஒரு தேசத்துக்கு ஏற்பட்ட புஸ்தகத்தை மற்றொரு தேசத்தில் அநுசரிப்பது பொருந்தாது. இப்பருவத்தில் பொதுவாகப் பூகோளத்தின் தன்மையைச் சரிவர விளக்கிக்காட்டினல் பிற்காலத்தில் பிள்ளைகள் அவரவருக்கு வேண்டிய விஷயங்களை இதையனுசரித்துச் சுலபமாய்த் தெரிந்து கொள்ளுவார்கள். பூகோளத்துடன் பூத பௌதிகசாஸ்திரமும் (Physical Geography.) ககோள சாஸ்திரத்திற் சிறிது பாகமும் கற்பித்தல் மிக்க பயனைத்தரும். அவற்றைப் பூதக்கண்ணுடி விநோதக்காக்ஷி (Magic lantern) மூலமாகவும், உண்மைக் காக்ஷிக் கண்ணுடி (Realistic Scope) மூலமாகவும் பற்பல சித்திரப்படங்கள் மூலமாகவும் சுலபமாய் அறிவைப் புகட்டல் வேண்டும். சுருங்கச் சொல்லில் இப்பாடம் தற்காலமிருப்பது போல் போலிப் பாடமா யிருப்பதை விட்டு உண்மைப் பாடமாகக் கற்பிக்கப்பட வேண்டுமானல் மேற்கூறிய சாதனங்களைக் கைக்கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு பெரும் பாடசாலைகளிலும் இச்சாதனங்கள் ஏற்படாவிட்டால் அதனை அங்கீகாரம் செய்தல் கூடாது. சாஸ்திர பாடத்துக்கு (Science teaching) எப்படிப் பிரத்தியேகமாய்க் கருவிகளும் அவைகள் வைக்க அறைகளும் அப்பாடத்தைக் கற்பிக்கத்தக்க பயிற்சி யுள்ளவர்களும் ஏற்பட்டு நடந்து வருகிறதோ அம்மாதிரியே இப் பூகோள பாடத்துக்கும் இவ்வித ஏற்பாடுகள் உண்டாக வேண்டும். அதுவரை இப்பாடம் திருப்திகரமாயிரா தென்பது திண்ணம். சரித்திரத்தையும் பூகோளத்தையும் சேர்த்துக் கற்பித்தலே நலமாகும். அப்போதைக்கப்போது மாணுக்கர்களைக் கூட்டி வேடிக்கை விநோதமாக இக்காக்ஷிகளைக் காட்டி அறிவுறுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இவை நிற்க.

இவ் வகுப்புக்களில் படமெழுதலையும் (Drawing) பொருட்பாடங்களையும் கட்டாயபாடமாக அநுசரிக்கவேண்டும். பொருட்பாடம் தமிழிலேயேஇருந்தால் போதுமானது. கிருஷி நூலை இஷ்ட பாடமாகப் போதிக்கலாம். தேகாப்பியாச விஷயத்தில் அபாயகரமான பழைய முறைகளை முற்றிலும் ஒழித்து ஸாண்டோ என்பவரது முறையைக் கைப்பற்றச் செய்தல் நல

மாயிருக்குமெனத் தோற்றுகிறது. இவ் வகுப்புக்களில் பிள்ளைகளுக்குப் புகட்டும் அறிவானது நம் தேசக் கைத்தொழில் அபிவிருத்திக்கும் வியாபார விருத்திக்கும் விவசாய விருத்திக்கும் தக்கவண்ண மிருத்தல்வேணடும். சுயபாஷையை நன்றாய் எழுதப் படிக்கவும் ஆங்கிலத்தில் கூடியமட்டில் விஷயங்களை அறியவும் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தவும் போதுமான சக்தியை யடையவும் கற்றுக்கொண்டால் போதுமானது. ஸம்ஸ்கிருதம் முதலிய உயர்தரப் படிப்பை இவ் வகுப்புக்களில் பாடசாலையில் கற்பிப்பது சிறிதும் யுக்தமாகத் தோற்றவில்லை.

இவ்வகுப்புக்களில் சுயபாஷையைக் கட்டாயப்படிப்பாகவும் ஸம்ஸ்கிருதத்தை இஷ்டபாடமாகவும் வைப்பதில் நமக்குச்சிறிதும் ஆக்ஷேபணையில்லை. சுயபாஷைக்குப் பிரதி இப்பாஷையை எடுத்துப்படிக்கும்படி விடுதல் கூடாது என்பது நம் கருத்து. ஸம்ஸ்கிருதப்படிப்பு மிகச்சிறப்புற்றது. புத்தியை விருத்திபண்ணுவதற்கு மேலான படிப்பே. நம் வாழ்நாளுக்கு மிகவும் உபயோகப்படக்கூடியசுயபாஷாஞானம் போதுமானபடி இல்லாத இப்பருவத்தில் அதனைப்புகட்டுவது பொது ஜனக்ஷேமத்துக்கு அனுகூலமாகாது என்பதைமட்டும் சுட்டிக்காட்டுவோம். பொலிடிகல் எகானமி (Political Economy) என்ற அர்த்தசாஸ்திரத்தை இஷ்டபாடமாக மூன்றாவதுபாரத்தில் தமிழில் கற்பித்தல தேசத்துக்கு நன்மையுண்டாக்கும். மென்சுரேஷன் (Mensuration) என்ற அளவு நூலும் அவ்வாறே.

ஆகையால் நம் நாட்டார் இவ்விஷயங்களை நீள நினைந்து சீர் திருத்தம் செய்ய முயலவேண்டியது இன்றியமையாதது. பெற்றோர்கள் தம் புத்தியை இது விஷயத்தில் செலுத்தி முயன்றாலொழிய வித்தியா இலாகாதார் இவைகளைச் சீக்கிரம் கவனிக்க இடமிராது. அதுவரை நம் மக்கள் அநாவசியமான சுமைகளைச் சுமந்து மூளை சிதறி நமக்கும் சுமையாகவே இருப்பார்களென்பது திண்ணம்.

[இன்னும் வரும்]

பத்திராதிபர்.

சைவசித்தாந்தம்.

[முன் தொடர்ச்சி]

இந்த ஆகமங்கள் லௌகிகம், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம் மாந்திரம் என ஐந்து வகைப்படும். தற்காலத்திற் பயன்றருவது வைதிகம்; ஆத்தும விசார வியற்கையது அத்தியான்மிகம்; யோகவியற்கையது அதிமார்க்கம்; சிவஞானவியற்கையது மாந்திரம் எனப்படும். அவற்றுள், மாந்திரம், பிறநூல்களைப் பூருவபக்ஷமாகக் கீழ்ப்படுத்தி, மேற்பட்டு விளங்கும் காமிக முதலிய சைவாகமங்கள், ஆகமாந்தம் என்னும் ஞானப் பகுதி, போகரூடிநாமமாகிய சித்தாந்தம் என்னும் பெயரை யுடையது. அது இரத்தினத்திரயத்திலே, "சித்தாந்தமே சித்தாந்தம், அவைக்கு வேறானவை பூருவபக்ஷங்கள் என்றும் காந்தத்திலே சிவன் வெள்ளிமலையாகிய கைலாசத்திலே சனகர் முதலிய முநீந்திரர்களுக்குத் திரிபதார்த்தங்களினாலே இரகசியமாயும் ஆகமாந்தம் என்னும் பெயர்த்தாகியும் உள்ள சிந்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார் என்றும், சித்தாந்தமாவது காமிகம் முதலியனவாம். இதில் உயர்ந்தது பிறிதொன்றும் இல்லை. இந்தச் சைவநூலேமூலமாம் சைவமே வைதிகம் எனப்படும். வைதிகமே சைவம் எனப்படும். சைவமானது வைதிகத்தில் அடங்கியும் அடங்காமலும் இருக்கும். வைதிகமும் சைவத்திற் றாழ்ந்தது. முனிவரரே, அற்றாயினும், சைவம் வேதப்பொருளோடு ஒற்றுமையாய் இருத்தலால், வைதிகம் என்றும் வேத சாரம் என்றும் கூறப்படும். சிவப்பிரகாசமாகிய சிவஞானம்பரஞானம், பசு பாச பதார்த்தபோதமாகிய வேத முதலியன அபரஞானமாம். இராத்திரியில் மனிதரது கண்ணும் பூனையின் கண்ணும் விலக்ஷணமாய் இருப்பது போல, இந்தப்பரஞானமும் அபரஞானமும் விலக்ஷணமாய் இருக்கும், என்றும் கூறுமாற்றால் அறிக. லௌகிகம் முதலிய ஐந்தும் முறையே ஒன்றற் கொன்று ஏற்றமுடையன. காமிகத்தில் சித்தாந்தம் மந்திர தந்திரமாகும்; அதிமார்க்கம் அதனிற்றாழ்ந்தது, அத்தியான்மிகம் அதனிலும் தாழ்ந்தது, அதனிலும் தாழ்ந்தது வைதிகம், வைதிகத்திலும் தாழ்ந்தது லௌகிகம் என்று சொல்லப்பட்டது.

சைவாகமங்கள் வைதிக பாகியம் ஆதலின் அப்பிரமாணங்கள் என்று சிலர் அறியாதுகூறுவர். வேதாந்த நிஷ்டைபெற்றுக் களங்கமற்ற ஞானிகளும், எனது சிவாகமத்திலே தற்பரர்களாகி ஞானபாதத்திலே நிலை நின்றோருமாகிய இருவகையோரும் பெறற்கரிய சாயுச்சியம் பெறுவர்கள். கருத்தையும் பிரமத்தையும் உணர்த்தும் வேதாகமம் என்று பிரசித்திப்பெற்ற இரண்டு மார்க்கங்களிலும் நில்லாத பாவிகள் சாத்திரத்திற் கூறிய நால்

வகைத்தண்டங்களாலும் தண்டிக்கற் பாலர்கள்; என்னும் காந்த சம்பவசிதம்பர மான்மியத்தில் சிவன் கூறிய பொருளையுடைய வியர்ச வாக்கியத்தினுலே, அது பேதைமையாம் என மறுக்க. வேத நெறிவழுவிய மாந்தர்க்கே தந்திரங்கள் கூறப்பட்டன எனச் சில நூல்களிற் கூறியது தென்னையெனின் ஆண்டுக் கூறியது வாம சோம லாகுள பைரவ முதலிய தந்திரங்களை அன்றிச் சிவ சித்தாந்தத்தை அன்றென்க. அது அப்ப தீக்ஷதர் இயற்றிய சிவதத்துவ விவேக விருத்தியில் பல பிரமாணங்கொண்டு சாதிக்கப்பட்டது. காந்தத்திலே, சிவன் தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருந்து வேதங்களையும் உபநிடதங்களையும் சனகர் முதலிய முனீந்திரர்களுக்கு ஓதுவித்தார் அவர்கள் நெடுநாள் வரை ஓதியும், சிவனது மாயையினுலே ஞானம் நிலை பெருதவராயினர். என்றும் பின்பு ஆகமாந்தம் என்னும் பெயருடைய சித்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார் என்றும் கூறுமாற்றுல் அறிக. சைவ புராணத்தில் "பசு சாத்திரங்களைப் பற்றுது விட்டுச் சிவசாத்திரத்தைப் பற்றிப் பயிலும் பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருமே ஆசாரியராவரென்று புகழப்படுவர். சிவாகமத்திற் கூறப்பட்ட ஞானமே ஞானமென்று கூறப்படும்; அதுவே முத்தி சாதனமென்றும்" கூறுதலானும்; சுவேதர் உபமன்னியு கிருஷ்ணர் அருச்சுனர் முதலியோர் சிவ சித்தாந்த மார்க்கச் சிரவணஞ் செய்தமையாலும் சிவ சித்தாந்தம் வேதநெறி வழுவிய மாந்தர்க்குக் கூறிய தென்பது சிறிதும் பொருந்தாது. இன்னும் பிரமமீமாஞ்சைக்கு நீலகண்டசிவாசாரியர் இயற்றிய பாஷ்யத்தில், "வேத சிவாகமங்களுக்குப் பேதங் காண்கின்றிலம் வேதமே சிவாகமம் என்று," கூறப்பட்டது. இப்படிப்பட்ட சைவசித்தாந்தத்தை பல பிறவிகளிற் செய்த தபோ பலபதினுலே அடைவார்கள்.

உதாரணம்—சிவஞான சித்தியார்.

புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன் மிருதிவழியுழன் றும் புகலு மாச்சிரம
வறத்துறைகள வையடைந்தும் அருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்முற் சைவத்
திறத்தடை வரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.

வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க
ளாதி நூலநாதிய மலன்றரு நூலிரண்டு
மாரணநூல் பொது சைவமருஞ் சிறப்புநூலா

நீதியினாலுலகர்க்குஞ் சத்திநிபாதர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையினொழிபொருள்வேதாந்தத்
தீதில்பொருள்கொண்டுரைக்குநூல் சைவம்பிறநூ
திகழ்பூர்வஞ்சிவாகமங்கள் சித்தாந்தமாகும்.

சித்தாந்தத்தேசிவன்றன் றிருக்கடைக்கண்சேர்த்திச்
செனனமொன்றிலே சீவன்முத்தராக
வைத்தாண்டுமலங்கழுவிஞானவாரி
மடுத்தானந்தம்பொழிந்து வரும்பிறப்பையறுத்து
முத்தாந்தப்பாதமலர்க்கீழ்வைப்பனென்று
மொழிந்திடவுமுலகரெல்லாமூர்க்கராகிப்
பித்தாந்தப்பெரும்பிதற்றுப் பிதற்றிப்பாவப்
பெருங்குழியில்வீழ்ந்திடுவ ரிதுவென்னபிராந்தி. என்றும்

குமரகுருபரசுவாமிகள் பண்டார மும்மணிக்கோவையில்.

வேதமென்னும் பாதபம்வளர்த்தனை
பாதபமதனிற்படுபயன்பலவே—அவற்றுள்
இலைகொண்டுவந்தனர் பலரேயிலையொரீஇத்
தளிர்கொண்டுவந்தனர் பலரேதளிரொரீஇ
யரும்பொடுமலர்பிஞ் சருங்காயென்றிவை
விரும்பினர்கொண்டு கொண்டுவந்தனர்பலரே
யவ்வாறுறுப்பு மிவ்வாறுபயப்ப
வோரும்வேதாந்த மென்றுச்சியிற்பழுத்த
வாராவின்ப வருங்கனிபிழிந்து
சாரங்கொண்ட சைவசித்தாந்தத்
தேனமுதருந்தினர் சிலரே

என்றும் கூறுமாற்றால் சைவசித்தாந்தத்தினருமை நன்றாய்க் கடைப்பிடித்து ஒழுகவேண்டும்.

இனி உபாகமங்கள் இருநூற்றேழாவன—:வத்திராரம், பைரவோத்தரம், மிருகேந்திரம், வீணாசிகோத்தரம், தாரம், சந்தம், சந்தாதி, ஆத்மயோகம், சுசிந்தியம், சுபகம், வாமம், பாவகாசம், பரோற்பவம், (சுரோற்பவம்) அமிருதம், காரணம் பாவகம், தௌர்க்கம், மகேந்திரம், பீமம், மாரணம், திவேஷ்டம், பிரபூதம், பரோத்பூதம், பார்வதீசம்ஹிதை, பதுமசம்ஹிதை, அமேயம், சப்தம், ஆச்சாத்தியம், அசங்கியம், அமிதௌஜஸம், ஆநந்தம், மாதவோத்பூதம், அற்புதம், அக்ஷதம். அதீதம், மங்களம், சுத்தம், அப்பிரமேயம், சாதிபாக்கு, பிரபுத்தம், விபுதம், அத்தம், அலங்காரம், சுபோ

தகம், வித்தியாபுராண தந்திரம், வாசவம், நீலலோகிதம், பிரகாரணம், பூததந்திரம், ஆத்துமாலங்காரம், காச்சியபம், கௌதமம், ஐந்திரம், பிராமியம், வாசிட்டம், ஈசாநம், விசயம், உற்பவம், சௌம்மியம், அகோரம், மிருத்தியுநாசகம், குபேரம், மகாகோரம், விமலம், நிச்சுவாசம், உத்தரநிச்சுவாசம், நிச்சுவாசமுகோதயம், நிச்சுவாச நயனம், நிச்சுவாசகாரிகை, கோரசமினும், யமாக்கியம், குய்யம், பிரசாபதிமதம், பத்துமம், சுவாயம்புவம், பிரத்தாரம், புல்லமல்லம், பிரபோதம், போதம், போதகம், அமோகம், மோகசமயம், ஆகடம், சகடாதிகம், விகலம், விலேகநம், பத்தரம், வீரம், காலக்கனம், கலாதீதம், இரௌரவம், இரௌரவோத்தரம், மகாகாளமதம், சந்திரம், மகுடம், மகுடோத்தரம், அநந்தம், போகம், ஆக்கிராந்தம், விருஷபிங்கம், விருஷோத்தரம், விருஷோற்புதம், சுதந்தம், இரௌத்தரம், பத்தரவிதம், அரேவதம், அதிக்கிராந்தம், அட்டஹாசம், அலங்கிருதம், அர்ச்சிதம், தாரணம், மாரணம், தந்திரம், ஸ்திரம், ஸ்தாணு, மகாந்தம், வாருணம், நந்திகேசுவரம், ஏகபாதம், சங்கரம், நீல ருத்தரகம், சிவபத்தரம், கற்பபேதம், ஸ்ரீமுகம், சிவசாசநம், சிவசேகரம், தேவிமதம், சதுர்முகம், மலயம், (மகாயோகம்) அயோகம், சமுஸ்தோபம், பிரதிபிம்பகம், ஆத்துமாலங்காரம், வாயவ்வியம், தௌடிகம், துடிநீரகம், கலாத்யயம், துலாயோகம், (துலாரோகம்) குட்டிமம், பட்டசேகரம், மகாவித்தை, மகாசௌரம், கவசம், வராகம், பிங்களமதம், பாசபந்தம், தண்டதரம், அங்குசம், தநுர்த்தரம், சிவஞானம், விஞ்ஞானம், ஸ்ரீகாலஞானம், ஆயுர்வேதம், தநுர்வேதம், சர்ப்பதம் ஷ்ட்ரீவிபேதநம், கீதம், பரதம், ஆதோத்தியம், இலளிதம், இலளிதோத்தரம், கௌமாரம், சாரோத்ரம், ஔசநோத்தரம், சாலாபேதம், சசிகண்டம், இலிங்காத்யக்ஷம், சுராத்தியக்ஷம், சங்கரம், அமலேஸ்வரம், அசங்கியம், அநிலம், திவந்திவம், சிவதர்மோத்தரம், வாயுப்பிரோத்தம், திவ்வியப்பிரோத்தம், ஈசாநம், சர்வோற்கிதம், மதங்கம், யக்ஷணிபத்மம், பாரமேஸ்வரம், பௌஷ்கரம், சுப்பரயோகம், அம்சம், சாமாந்வியம், காருடம், நைருதம், நீலம், ரூக்ஷம், பாநுகம், தேநுகம், பிரபுத்தம், புத்தம், காலம், வாதுளம், உத்தரவாதுளம், காலஞானம், பிரரோகிதம், சர்வம், தர்மாத்மகம், சிரேஷ்டம், நித்தியம், சுத்தம், மகாநகம், விசுவம், விசுவாத்மகம் என்பனவாம். இவ்வுபாகமங்கள் பரமேசுவரனுக்கு பிராணவாயுவாகவும், இருபத்திரண்டு நாடிகளாகவும், வாசநாத்திரவியப்பூச்சாகவும், புட்பமாலையாகவும் கூறப்படும். தந்திரம், சித்தாந்தம், மந்திரம், ஆகமம் என்பன ஒருபொருட் சொற்கள்.

[இன்னும் வரும்]

சுப்பிரமணியபிள்ளை,

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

மன ஏகாக்கிரம்.

[முன் தொடர்ச்சி]

இனிப் பான சாதனங்களுள் ஒன்றாகப் பலரால் கருதப்படும் மதுவினைப்பற்றிச் சற்று இங்கு பிரஸ்தாபிப்போம். மதுவென்பது லகிரியை உண்டுபண்ணத்தக்க ஜல அம்ச சாதனம். அது பல்வகைப் படுமாயினும் அவற்றுளெல்லாம் ஆல்கொஹால் (Alcohol) என்னும் பதார்த்தம் கலந்திருக்கின்றது. அஃதே லகிரியை உண்டுபண்ணுவது. கடின பதார்த்தங்களுள்ளும் லகிரிச் சரக்குகள் பலவுள வாதலின் நாம் இங்கு மது சம்பந்தமாய்ப் பேசுவன யாவும் அவைகளையும் சம்பந்திக்கத் தக்கனவேயாம்.

ஆகாரம், பானம் முதலியன மனிதனுடைய சரீரத்தைப் போஷிக்கவே உட்கொள்ளப்படுகின்றன. ஆயின் அவற்றால் மனிதனது மனத்துக்கும் சரீரத்துக்கும் ஆரோக்கிய நிலையில் தீங்கு நேரிடா வண்ணம் இருத்தல் வேண்டுமென்பது யாரே அறியாதார்? அங்ஙனமாயின், மது வர்க்கங்கள் இவ்விரண்டிற்கும் ஆரோக்கியத்தை உண்டுபண்ணுகின்றனவா? என்ற கேள்விக்கு விடையே வேண்டற்பாலது.

எவ்வளவு சிறிய அளவாயினும் மதுவினை ஒருவன் உட்கொள்வானாயின், அது அவனுடைய கருவிகரணாதிகளை சாதாரண நிலைக்கு அதிகமாகச் சேஷ்டிக்கச் செய்வதை அறியாதிரான். அதுபோலவே அதன் வேகம் அடங்கும் பொழுது கருவிகரணாதிகள் அதிகமாகச் சேஷ்டித்த அளவுக்குத் தக்கபடி தளர்ச்சியடைவதையும் பாராதிரான். தவிரவும் லகிரி இருக்கும் பொழுது சாரமான எந்தக் காரியமும் செய்து முடித்தல் என்பது அசாத்தியமே. சாதாரண நிலைக்கதிகமாகக் கருவி கரணாதிகள் வேலைசெய்யின் நிச்சயமாக அவற்றிற்கு லயம் உண்டாமென்பதில் தடையென்ன? மதுபானமானது மனிதனுடைய குணத்தையே மாறுபடுத்தி விடுவதாகப் பலர் கொள்கின்றனர்.

அவ்வபிப்பிராயம் எமக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. ஒருவனுடைய குணத்தை எவ்வாற்றானும் பேதப்படுத்தல் என்பது பொருந்தாது. ஒருவனுடைய அறிவின் வளர்ச்சிக்குத் தக்கபடி குணங்கள் மாறுதல்கள் அடையுமே தவிர மற்றெவ் விதத்தினும் அவைகள் மாறுதல்களடையத் தக்கனவாகா என்பதே எமது துணிபு. குணங்களைச் சம்பந்தித்த மட்டில் அதாவது மனத்தைத் தாக்கும் விஷயத்தில் கல்வியும் மதுவும் ஒன்றெனக் கூறலாம். கல்வி எங்ஙனம் ஒழுக்கத்தைச் சீர் திருத்தாதோ, உள்ள ஒழுக்கத்துக்கநுகூலமாக இருக்குமோ அங்ஙனமே மதுவும் ஒருவனுடைய போக்கை மாற்றாமல் அதற்கநுகூலமே செய்வதாகும். (கல்விக்கும் அறிவுக்கும் நாம் கொள்ளும் பேதம் ஏட்டுச் சுரைக்காய்க்கும் வாஸ்தவச் சுரைக்காய்க்கும் உள்ள பேதமே.) இதனை ஓர் திருஷ்டாந்தத்தால் நன்கு விளக்குவாம்.

ஒரு மாஜிஸ்டிரேட்டும் ஒரு திருடனும் கிரிமினல் சட்டங்கள் நன்றாகத்தெரிந்தவர்களென வைத்துக்கொள்வோம். இவர்களுள் மாஜிஸ்டிரேட்டு தாம் கற்றகல்வியைத்தாமும் பிறரும் குற்றம் செய்யாதிருப்பதற்கும், திருடன்படிப்பைத் தானும் பிறரும் குற்றம் செய்வதற்கும் நியாயதண்டனையிலிருந்து தப்புவதற்கும் உபயோகப்படுத்துகிறார்கள் என்பது பிரத்தியக்ஷமன்றோ? அது போலவே ஓர் சாந்தசீலன் மதுவருந்துவானாயின் அவனது சாந்தகுணங்களே அதிகமாகவெளிப்படுகின்றன. பரமதுஷ்டனொருவன் அருந்துவானேல் அவன் துஷ்டத்தனங்கள் அதிகமாகச் சேஷ்டிக்கின்றன. ஒருவனிடத்தில்லாத குணங்களை மது எங்ஙனம் உற்பத்திசெய்யக்கூடும். அவ்வாறு கூறுதல் யுக்தி அநுபவங்களுக்கு விருத்த மென்றே சொல்வோம். அடங்கியேனும் இருந்திராத குணங்கள் ஒருநாளும் மதுபானத்தால் வெளிப்படுவதின்று. இது நிற்க. சரீரம் சம்பந்தித்தமட்டில் மதுபானம் முற்றிலும் தவறேயெனக்கூறலாம். அநேகருக்கு மதுபானமிகுதியால் ஓர் விதப்பைத்திய (Delirium Tremens) மே உண்டாயிருக்கின்றது. எத்தனையோ ரோகங்கள் அதனால் உண்டாகுமென்பதே டாக்டர்களின் அபிப்பிராயம்.

எவ்விஷயத்திலும் இரண்டு டாக்டர்களுக்கு ஓரே அபிப்பிராயம் இருத்தல் அபூர்வமென்னும் பழமொழிக்கிணங்க இவ்விஷயத்திலும் அவர்களுடைய அபிப்பிராயம் பலவாகவே காணப்படுகின்றது. ஆயினும் இதைப்பற்றி மதுவிலக்குக். காங்கிரஸ் சபையாரின் அபிப்பிராயத்தைப் பின்னால் வரைகின்றோம். பல தேசத்தார் ஒன்று கூடி இச்சபை ஏற்படுத்தியிருக்கின்றனர். சென்ற 1903வருஷத்தில் ஜேர்மேனி தேசத்தில் பிரமேன் (Bremen) என்ற நகரத்தில் இச்சபை கூடிற்று. அப்பொழுது பதினைந்து தேசத்தார்கள் கூடியிருந்தனர். அவருள் பிரதிகாரியஸ்தாகள் (Delagates) மாத்திரம் 1500 பேர்கள் சென்றிருந்தனர். அமேரிக்காவிலுள்ள கலாசாலைகளில்மதுவிலக்கப் போதனை சூப்ரிண்டெண்டெண்ட் (Superintendent) மேரிஹண்ட அம்மாள் அவர்களை அந்தச்சபைக்கழைத்து அமேரிக்காவிலுள்ள கல்லூரிகளில் மதுவின் கேட்டைப்பற்றிப் போதித்துவரும் போதனையால் உண்டான நன்மையைப்பற்றி பிரசங்கிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். இந்தக் காங்கிரஸ் சபையாரது அபிப்பிராயம் யாதெனின், லகிரியை உண்டுபண்ணுகின்ற ஆல்கொஹால் எனவே மதுவர்க்கங்கள் ஆகாரமுமல்ல மருந்துமல்ல ஆனால் நஞ்சாக இருக்கின்றது. (துஞ்சினார் செத்தாரின்வேறல்ல ரெஞ்ஞான்று, நஞ்சுண்பார் கள்ளுண் பவர்) இந்த ஆல்கொஹால் எதோடு கலந்து காணப்பட்டாலும் சரி அதெல்லாம் சரீரத்துக்கு விஷமேயாகும்.

அது சரீரத்துக்குப்பொதுவாக கேட்டை விளைக்குமென்பது மாத்திரமல்ல நாளாவர்த்தியில் சரீரத்தில் ஒவ்வொரு கருவியையுமே கெடுத்துப்போடுகின்றது. எந்தநல்லமூளையும் ஒருக்கால் பூர்த்தியான லகிரிகொள்ளுமாயின் பின் எக்காலத்தும் அதுபழையநல்ல ஸ்திதியை அடைகிறதே யில்லையென சாஸ்திரக்ஞர் கண்டு பிடித்திருப்பது பொது ஜனங்களுக்குத் தெரியவில்லை. இன்னும், ஆல்கொஹால் என்பது சரீரத்திலுள்ள எந்தக் கருவியாலும் ஜீரணிக்கப்படாதென்பதும் பொது ஜனங்களுக்குத் தெரியவில்லை என்றாலும் இவை வாஸ்தவங்களே. எதனாலெனில், இறந்துபோன குடிகாரனுடைய மூளையி

லும் இருதயத்திலும் ஆல்கொஹாலே என்று சொல்லத்தக்க ஒருவித ஜலபதார்த்தம் காணப்படுகின்றது. ஆகையால் அத்தகைய நஞ்சை ஆகாரமாகவோ மருந்தாகவோ உட்கொள்ளவே கூடாதென்பதே. குறித்த சபையில் மிகவும் நேர்த்தியாகப் பேசின ஜெர்மேனி தேசத்து டாக்டர் டெல்பிரக் (Dr. Delbruck) என்பவர் மதுவிலக்குப்போதனை சம்பந்தமாக அமெரிக்காவுக்குச் சென்றிருக்கின்றார். மதுவிலக்குப் போதனைகள் சர்க்கார் பள்ளிகளில் அவசியம் படிப்பிக்கப்படவேண்டுமென அமெரிக்காவில் பலவிடங்களில் சட்டமே உண்டாக்கப்பட்டிருக்கின்றது. இச் சட்டம உண்டான பிறகு சாதாரணமாக ஜனங்கள் 4 வருஷம் அதிகமாக ஜீவிப்பதாகக் கணக்கெடுக்கவும்பட்டிருக்கிறது.

ஆகையால் சரீர ஆரோக்கியத்துக்கு மதுபானம் முற்றிலும் விரோதமே செய்யுமெனக் கிரகிக்கத்தக்கது. இது பற்றியே, ஹிந்து மதத்திலும் மகமதிய மதத்திலும் மதுபானம் விலக்கப்பட்டிருக்கலாம்.

இது நிற்க, பானஞ் செய்யவேண்டிய காலத்தைப் பற்றியும் சிறிது பேசுதல் அவசியமே யாகும். சாதாரணமாக ஓர் பழமொழி வழங்குவதுண்டு. அதாவது "இடையிற் குடியேல் கடையில் மறவேல்." என்பதே. சாப்பிடுங் காலங்களில் மத்தியில் ஜலம் சாப்பிடப்படாதென்றும் சாப்பாடு முடிந்தவுடன் ஜலம் அருந்த மறந்துவிடக்கூடாதென்றும் இதன் பொருள் கூறுவர். அதற்குள்ள நியாயம் எமக்குப் புலப்படவில்லை. சாப்பிடுங்காலங்களில் மத்தியிலோ சாப்பிட்டு முடிந்தவுடன்தானேயோ ஜலம் அருந்துவதினால் அது சென்று ஜீரண சாதனங்களாகும் பித்த நீர் முதலியவைகளோடு கலந்து அவற்றின் சக்தியைக் குறைத்து விடுவதால் உட்சென்ற ஆகாரம் ஜீரணிப்பதற்குத் தடை நேரிடும். ஆகையால் பானம் செய்யத்தக்க காலங்கள் அவையாகா. பங்காள தேசத்தில் ஆகாரம் வாயில் வைக்கு முன் தொண்டையை நனைத்துக் கொள்வது போல் அவ்வளவு சிறு அளவு ஜலம் அருந்திக்கொள்ளுகிறார்கள். அதை நல்ல பழக்கமன்றென்று சொல்ல வரவில்லை. ஏனெனின்,

தடையின்றி ஆகாரம் உட்செல்வதற்காகவே அவர்கள் அப்போது பானஞ் செய்கிறார்கள். அதுவும் மிகவும் சுருங்கின அளவேயாதலினென்க. ஆயின், பானம் செய்யத்தக்க காலம் யாதெனின், சாப்பிடுதற்கு முக்கால் மணிநேரத்துக்கு முன் வரையும் சாப்பிட்டு முக்கால் மணி நேரம் கழிந்தும் பானம் செய்யலாம்.

[இன்னும் வரும்]

வள்ளிநாயகம்.

மாணவர்க்கு ஓர் கவனிப்பு.

மாணவர்காள்!

நீங்கள கல்விகற்கும் பருவத்தில் இருக்கின்றீர்கள். நீங்கள் கற்கும் புத்தகங்கள் உங்கள் பெரியோர் அனுபவத்திற் கண்ட விஷயங்களை அடக்கியிருக்கின்றன. நீங்கள் அப் புத்தகங்களிற் கற்கும் விஷயங்களெல்லாம் உங்கள் நுண்ணிய புத்தியில் ஒருவாறு விளங்குமேயன்றி ஐயமற விளங்க மாட்டா. நீங்கள் புத்தகப் படிப்பைவிட்டு உலகானுபவத்தைக் கற்கும் பருவத்தில் வந்தகாலையில் அவ்விஷயங்கள் திடமுற உணரப்படும். ஆதலால் கற்ற ஞானத்தைக் கொண்டு மாத்திரம் எவ்விஷயத்தையும் சித்தாந்தப்படுத்துவது குறைவுடையதாகவே காணப்படும். ஆகவே வித்யாப்யாசகாலத்தில் உங்கள் பருவத்திற்கு மேலான கொள்கைகளை விவாதிப்பது தகாது. உங்களைவிட அதிக அனுபவமுடைய பெரியரைக்கொண்டே விவாதாம்சங்களை உணர்ந்துகொள்வது உசிதமாம். தற்சமயம் ஜாதிவேற்றுமை விஷயமாகத் திருநெல்வேலியின்கண் நடந்துவருகிற உபந்யாசங்களைக் கவனியுங்கள். அவ்விஷயத்தில் இருதிறத்தினரும் அவர்கொண்ட கக்ஷியைச்சாதித்தலும்கூடும். ஒருகக்ஷிவெல்வதும்தோற்பதும் கல்வித்திறமையைப் பொறுத்து நிகழ்தலுங்கூடும். இவ்விஷயத்தில் பெரியோரை அடுத்து ஐயம் தீர்த்துக் கொள்ளலாமெனின் அவரும் ஏதாவது ஒரு பக்ஷத்தில் அபிமானமுடையவராக இருத்தல் கூடும். ஆகிலும் அப்பெரியோரது அரிய வாக்கியங்களுடன் உங்களுடைய யுக்தானுபவத்தையும் ஒப்ப நோக்கி ஒருவாறு தெரிந்துகொள்வது கடமையாம். நிற்க.

ஜாதி வேற்றுமை விஷயமாக என்னுடைய சொந்த அபிப்பிராயத்தை சித்தாந்தமாக நாட்ட வரவில்லை. இவ்வுலகத்திலுள்ள ஜனங்களின் பூர்வீக அனுஷ்டான வரலாறுகளையும், அவர்களது ஜென்ம வரலாறுகளையும் தெளிவாய் உணர்த்தத்தக்க கருவி நூல்கள் திட்டமான கால்வரையறையுடன் கிடைத்தாலன்றி நாம் அது விஷயத்தில் தீர்மானமான முடிவுக்கு வருதல் அரிது. எனினும் தற்காலம் கிடைக்கதக்க நூல்களையும் பொதுவான ஙியாய உணர்ச்சியையுங் கொண்டு ஒருவாறு விவகரித்துப் பார்க்கலாம்.

தற்காலம் வழங்கும் ஆங்கிலப் பூகோள சாஸ்திரமானது இவ்வுலகத்தை ஐந்து அல்லது ஆறு கண்டங்களாக வகுக்கின்றது. அவ்வைந்தனுள் ஆசியா கண்டம் ஒன்று. அவ் ஆசியா கண்டத்துள் இந்தியாவானது தெற்கொடுக்கமுள்ளது. அதில் வசிக்கும் பல மதஸ்தர்களுள் ஹிந்துக்கள் ஓர் பெரும் வகுப்பினர். இந்த ஹிந்து மதஸ்தருள்ளும் பல பாஷைகள் பேசுகிற ஜனங்கள் உளர். அவருள்ளும் சம்ஸ்கிருதம் பேசுகிற ஜனங்களுக்குள் தான் தற்காலம் விவாதிக்கிற பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்ரர் என்கிற ஜாதி வகுப்பு ஏற்பட்டிருப்பதாக சம்ஸ்கிருத நூல்களில் விளங்குகின்றது. அந்நூல்களிற் பிரதானமானவை தர்ம சாஸ்திரங்கள். அவற்றுள் மனுதர்ம சாஸ்திரம் முக்கிய ஆதாரமாகின்றது. அது ஜாதி ஆசாரங்களைப்பற்றி பிரஸ்தாபிக்கின்றது. அந்நூலில் முதலாவது அத்தியாயத்தில், (லோகாநாம், து, விவிருத்யர்த்தம்) என்று தொடங்கிய முப்பத்தொன்றாவது சுலோகத்தில் உலகம் பெருகும் பொருட்டு பிர்மாவின் முகம், வாகு, தொடை, பாதங்களினின்றும் முறையே பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் சூத்ரர் என்கிறவர்கள் உண்டானதாகவும், 10-வது அத்தியாயத்தில் (அஹிம்ஸா, ஸத்யம்) எனத்தொடங்கிய 63-வது சுலோகத்தில்; (கொல்லாமை) அஹிம்ஸை, சத்யம், கள்ளாமை, தூய்மை, ஐம்புலனடக்கமுதலியன நான்குவருணத்தாருக்கும் பொதுத்தர்மமாகமனுவிதித்தார் எனவும் காணப்படுகின்றன. இதனை ஆலோசிக்குமளவில் தொழிலின் தாரதம்யத்தின் பேரில் இலௌகிகமாக நான்கு ஜாதியாருள்ளும் பெருமை சிறுமை ஏற்பட்டுள்ளன. என்பதும் அக்காலத்தில் இப்பாகுபாடு இல்லாவிடில் உலககாரியம் நடைபெறமாட்டாதென்பதும் ஒருவாறு ஊஹிக்கத்தக்கதாகின்றது. ஆனால் பரலோகத்திற்குச் சாதனமாயுள்ள யோக்கியதையானது நான்கு ஜாதியாருக்கும் ஒருங்கே வகுக்கப்பட்டிருக்கின்றது. இவ் விஷயத்தில் தாரதம்மியம் கற்பித்திருப்பதாகத் துலங்கவில்லை. இவ்வுலகத்தில் மூளை வேலையுள்ளவர்களுக்கு விசேடமதிப்பும், மூளையின்விசேட உதவி வேண்டாத தொழில்களுக்கு அவ்வளவு மதிப்பின்மையும் ஏற்பட்டிருப்பது இயல்பே. ஆதலால் மூளை வேலைக்கு உரிமைப் படுத்தப்பட்ட

உதவி வேண்டாத தொழில்களுக்கு அவ்வளவு மதிப்பின்மையும் ஏற்பட்டிருப்பது இயல்பே. ஆதலால் மூளை வேலைக்கு உரிமைப்படுத்தப்பட்ட பிராமணர்களுக்கு விசேடப் பெருமையும் மற்றவர்க்கு அவ்வள வின்மையும் காணப்படுகின்றன. ஆயின் அனைவரும் பிராமணர்களுடைய தொழிலைக் கைப்பற்றலாகாதோ வெனின் அவ்விஷயத்தில் காலத்திற்கேற்ப ஜனங்களுடைய நன்மையைக் கருதி அரசர்கள் இயற்றும் விதிகளே ஆளத்தக்கன. மனுதர்மசாஸ்திரம் உண்டான காலத்தில் இருந்த ஜனங்களின் இயல்புக்குத் தக்கவாறு அவர் விதித்தனவே அமைவுடையதென ஊஹிக்கத் தக்கதாம். தற்காலம் ஆங்கிலேய அரசர் கல்விச்சாலைக்கு ஏற்படுத்திய சம்பளங்களில் ஹிந்துக்களுக்கு ஓர் விதமும் மகம்மதியர்க்கு ஓர் விதமும் ஆண் பாலாருக்கு ஓர் விதமும் பெண்பாலாருக்கு ஓர் விதமுமாக சட்டங்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர். சில ஜில்லாக்களில் அரசாங்க உத்யோகங்களுங் கூட சில ஜாதியார் கிடைக்காத பக்ஷத்தில் சில ஜாதியாருக்குக் கொடுப்பதென விதித்திருக்கின்றனர். இதனால் அரசாங்கத்தாரை பக்ஷபாதமுள்ளவர்களென்று கூறத்தகுமா தகாது. ஒவ்வோர் நோக்கம் பற்றி பொதுவாக ஜனங்களுடைய நன்மையைக் கருதியே விதிகள் பிறப்பித்திருக்கின்றனர். அந்நோக்கம் நிறைவேறி வரவே, அவ்விதிகளை காலத்திற்குத்தக்கவாறு மாற்றவும் செய்வர். அவ்வாறே ஜாதி வேறுபாடு விஷயத்திலும் தொழில்கள் காலத்துக்குத் தக்கபடி மாறுபட்டபோதிலும் யோக்கியதையானது எத்தொழிலைச் செய்தாலும் ஒருப்போலவே வேண்டப்படுமென்பதை மகான்கள் கருதிக் குணயோக்கியதையை நான்கு வருணத்தார்க்கும் பொதுப்பட வகுத்துள்ளார். ஆகவே தொழில் பர்றி ஏற்பட்ட ஜாதி வகுப்பை உள்ளவாறு உணராமல் ஜாதி விவகாரத்தை விசேடமாகப் பெருக்கி உள்ள வொற்றுமையையும் பின்னப்படுத்தாமலிருப்பதே மேலானதோர் செயலாம்.

இலக்குமணப்போற்றி.

தர்மி லோபி சம்வாதம்.

[முன்தொடர்ச்சி.]

உலோபி:— ஷி முனிவரால் வந்த கன்னியரைச் சேர்வதாற் குற்றமொன்றுமில்லையே, அப்படியிருக்க, அவன் ஏன் மறுத்தனன்?

தர்மி:— ஷி முனிவரது சிருஷ்டியால் வந்த கன்னியராதலால் அவர்கள் ரிஷிப்பெண்களென மறுத்து விட்டனன். அது நியாயமன்றோ? அன்றியும், பரஸ்திரீகமனம் கூடாதென்பதும் சாஸ்திர விதியாம்.

உலோபி:— பொய் சொல்லப்படாத விஷயத்தை விளக்கினீர். பரஸ்திரீகமனமாகாதகாரணம் யாது? அதையும் சொல்லும் பார்ப்போம்.

தர்மி :— பரஸ்திரீ கமனத்தால் அநேக தீங்குகளுண்டாகும். வேசியரது துர்க்குணங்களைப்பற்றி முன்பே சொல்லி யிருக்கின்றேனல்லவா? இனிப் பிறன் மனையாளைச் சேருவதால் விளையுந் தீங்குகளையும் சொல்லுகின்றேன் கேளும். அதாவது, ஒருவனுடைய மனையாளிடத்தில் போகத் துணிவதால் நரகமிறந்தபினுண்டென்றாலும் உயிருடனிருக்கையில் யாது சம்பவிக்குமென்றால் அவளை விரும்பித் தான் வீட்டினுள் நுழையும்போது அல்லது நுழைந்து மீண்டும் வெளியே வரும்போது யாராவது கண்டால் மானங்கெட்டுப்போகுமே யென்றும் அப்பெண்ணின் புருஷன் முதலிய சொந்தக்காரர் காணின் நன்றாய்ப் புடைத்துக் கொன்று விடுவார்களே யென்றும் அவளுடன் உல்லாசமாயனுபவிக்க முடியாமல் அனுபவிக்கும்போது மனதில் அச்சங் கொண்டே யிருக்க நேரிடும். இது அப்படிப்பட்ட செய்கையுடையவர்களாலே நீர் கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூடும். இதற்குச் சாஸ்திர பிரமாணமுமுண்டு. சொல்லுகின்றேன் கேளும். அதாவது, பொதுமகளிரைச் சேர்ந்தவர்கள் கொடிய நரகத்திலழுந்துவார்களென்றால் குலமகளிரைச்சேர்ந்தவர்கள் விஷயம் சொல்லவும் வேண்டுமோ? அக்குலமகளிரிலும் உயர்குலப் பெண்கள், விவாகமாகாத கன்னியர், விதவைகள், இப்படிப்பட்டவர்களைச் சேர்பவர்கள் விஷயமும் நீரே யோசித்துக்கொள்ளும். தேவேந்திரன் கௌதம முனிவருடைய மனைவியை விரும்பிப்போய்ப் பட்டபாட்டடையும் சந்திரன் தன் வித்யா குருவாகியும் தேவ குருவாகியும் விளங்கிய வியாழபகவானது மனைவியை விரும்பிப் பட்டபாட்டையும் கேட்டிலீரோ?

உலோபி:—தேவேந்திரனும் சந்திரனும் என்னபாடுபட்டார்கள்? விவரமாய்ச் சொல்லும்.

தர்மி:—தேவேந்திரன் கௌதமருடைய மனைவியாகிய அகலிகையை விரும்பிப்போய்ச் சேவலுருக்கொண்டுகூவ, விடியற்காலத்தில் கங்காஸ்நானத்திற்குச்செல்லும் நியமங்கொண்டிருக்கும் கௌதமர் கோழிகூவிற்றாதலின் விடியற்காலமாகிவிட்டதென்று தீர்மானித்துக் கங்கைக்குப் புறப்பட்டுப்போனவுடனே தேவேந்திரன் கௌதமரைப்போலுருவெடுத்து உள்ளேசென்று அகலிகையுடன் மருவி விளையாடிக்கொண்டிருக்கையில், கங்கைக்கேகிய கௌதமர் கங்கை நித்திரையிலிருக்கக்கண்டு விடியற்காலமாகவில்லை யெனவும் நடந்தசூது இன்னதெனவும் ஞான திருஷ்டியாலறிந்து மீண்டும் மனைக்குவந்து தேவேந்திரன் செய்த வஞ்சனை முதலிய தீங்குகளை நினைந்து நீ

யோனியின்மே லாசைப்பட்டபடியால் உன் சரீரமுழுதும் ஆயிரம் யோனி மயமாகக் கடவதென்று சபித்தமேல் வருந்துவதைக் கண்டு தேவரிரக்கங் கொண்டு செய்த பிரார்த்தனைக் கிரங்கி உன் பார்வைக்கு யோனியாகவும் மற்றையர் பார்வைக்குக் கண்களாகவு மாகுகவென்றும், தம்மனைவி கல்லாய்ப் போகவும் சபித்து அவள் பிரார்த்தனைக் கிரங்கித் தசரதச் சக்கரவர்த்தியின் குமாரராக அவதரிக்கப் போகிற ஸ்ரீ இராமர் பாதம் பட்டவுடனே பழைய வுருவாகுக வென்றும் கருணை கூர்ந்தனர். சந்திரன் தன் குருபத்தினியைச் சேர்ந்து களங்கரூபமடையச் சபிக்கப்பட்டனன். அல்லாமலும் ஸ்ரீராமர் பத்தினியாகிய சீதையை இராவணேஸ்வரன் இச்சித்துக் குடும்பத்துடன் நசித்துப்போனது இராமாயணம் படிப்போர்களால் நீர் கேட்டிருக்கலாம். பெண்களும் அறிந்த விஷயமே. இத்தியாதி காரணங்களால் பரஸ்திரீ கமனம் செய்வதைக் கனவிலும் நினைக்கவொண்ணாது. தனக்கு விதிப்படி விவாகமான மனைவியினிடத்திலேயே சுகமனுபவிக்க வேண்டும். அதுவே முறை. அவளை யெவ்வாற்றானும் வஞ்சிப்பது தோஷம்.

உலோபி:—ஒருவன் பரஸ்திரீ கமனம் செய்வதால் அவனுக்குப் பலவிதமான தீங்குகள் விளைவதோடு நரகமுங் கிடைக்குமென்று சொன்னீரே ஒருவனுக் கேற்படும் மனைவி யெப்படி யிருத்தல்வேண்டும்? அதையும் சொல்வீராக.

[இன்னும் வரும்]

சே. கு. விசாகப்பெருமாள் முதலியார்,

திருச்செங்கோடு.

நட்பு.

மனிதன் எப்பொழுதும் தன் இனத்தாருடைய சாவகாசத்தை அதாவது கூட்டுறவை விரும்பும்பிராணி. ஒருவன் மற்றவர்களுடைய கூட்டமில்லாமல், ஏகாங்கியாயிருந்துகொண்டு எல்லாக்கவலைகள் துயரங்களினின்றும் நீங்கி யாதொரு குறைவுமில்லாமல் வாழ்ந்துகொண்டிருந்தாலுங் கூட சந்தோஷமில்லாதவனாகவேயிருப்பான். தத்துவசாஸ்திரிகளுக்கும், ஞானிகளுக்கும், யோகிகளுக்கும் தனித்திருந்து கடவுளை சதா தியானம் செய்துகொண்டிருத்தல் பிரியமாயிருக்கலாம். ஆனால் இவ்வுலகின்கண் உழன்று ஜீவனோபாயம் செய்யும் பெரும் பாலரான நம்மவர்களுக்கு தனித்திருப்பது துக்க

த்தை தருவதாகவே யிருக்கிறது. நமக்கு நன்மையான ப்ராக்ஷியங்கள் சம்பத்துக்கள் முதலானவைகள் பெரும்பாலும் நம்முடைய முயற்சியினாலும் கடவுளருளினாலும் கை கூடினாலும் காரியம் சித்தியானதினாலுண்டாகும் மகிழ்ச்சியுடன் நம் வர்த்தமானங்களை நம் சிநேகிதரிடம் சொல்லி அவர்களால் நமக்குச் சொல்லப்படும் இனிய வார்த்தைகளைக் கேட்கவே அதிக ஆனந்தத்தையடைகிறோம். காரியம் சித்தியானதினால் உண்டாய மகிழ்ச்சி ஒரு பங்கும், அதை நம் சிநேகிதாபால் சொல்லி அதனால் அடையும் மகிழ்ச்சி இரண்டு பங்குமாகும். ஆகவே நமக்குண்டாகும் சந்தோஷத்தை இரட்டிப்பாக அதிகரிக்கும்படி நமது சிநேகிதர்கள் செய்கிறார்கள். நமக்குத் துன்பம் வந்துற்ற காலையில் தகுந்த சமாதானங்களைச் சொல்லி நம்முடைய துயரத்தை ஆற்றுகிறார்கள்.

ஒவ்வொருவருக்கும் தம் பெற்றோர்களைத் தவிர உறவினர்கள், நெருங்கிய பந்துக்கள் பலருண்டு. அவர்கள் நம்முடைய இரத்தக் கலப்புள்ளவர்களாயிருப்பதால் நம்மீது அதிகப் பிரியமுடையவர்களாயும், நமக்கு நன்மை பயக்கத்தக்கவைகளைச்செய்வதில் கருத்துள்ளவர்களாயும், நாம் இகபர சுகங்களையடைந்து சௌக்கியமாயும் சந்தோஷமாயும் வாழ்ந்திருக்க வேண்டுமென்று விரும்புவார்கள். இவர்கள் வாஞ்சையைச் சிலர் இயற்கை நட்பென்று சொல்வார்கள். ஆனால் நட்பென்பது இரத்தக் கலப்பில்லாமலிருந்தாலும்கூட பரஸ்பரம் இருவருக்கும் நிகழ்கின்ற உள்ளன்பு உணர்ச்சியதாகும். நம் குடும்பத்திலுள்ள உறவினர்களைப் பார்க்கிலும், சிநேகிதர்மாட்டுண்டாகும் அன்பு மிகுந்த பெருமையுள்ளதா யிருக்கும். நற்குணம் ...ந்த சீலர்களுடைய நண்பானது நம் வாழ்நாளில், கவலையும் இடுக்கண்களும், வந்துற்ற காலத்தும் நமக்கு எப்பொழுதும், ஆனந்தத்தையும் சமாதானத்தையும், தரும்படியான ஒரு சஞ்சீவிக்கு ஒப்பாயிருக்கிறது. இது பற்றியே

இறப்ப நினைக்குங்கால் இன்னாதெனினும்
பிறப்பை எவரும் முனியார்—பிறப்பினுட்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்றும்
நண்பாற்றி நட்கப் பெறின்.

என்றார் நாலடியாரினும். அ...வது பிறப்புத் துன்பமாயினும் பெரியோரைச் சிநேகித்தால் அப்பிறப்பை யாரும் வெறுக்கார் என்பதே.

அதிகமான ஆட்கூட்டங்களில் கூடி நாம் சம்பாஷித்துக்கொண்டிருந்தால் அனேக காரியங்களைப் பற்றிப் பேசித் தெரிந்துகொள்ளலாமென்று நாம் நினைக்கக்கூடும். ஆனால் வாஸ்தவம் அப்படியன்று. ஒவ்வொருவரும்

தம் முறையில் பேசவேண்டிவருமாதலால் பல விஷயங்களைப் பற்றி சம்பாஷிக்கொணுது. சொற்பப் பேர்களுடன் சம்பாஷித்தால் அதிகப் பிரயோஜனமாயிருக்கும். அதிலும் அத்தியந்த ஆப்த சிநேகிதரான இருவர்கள் சந்தித்து வார்த்தையாடும்பொழுது சம்பாஷணையானது விரிவாகவும் களங்கமற்றதாகவும் பல விஷயங்களைச்குறித்து அறிவைப் புகட்டக்கூடியதாகவுமிருக்கும். இந்த சந்தர்ப்பங்களில் ஒருவன் தன் மனதின்கண்ணுள்ள எண்ணங்கள் எல்லாவற்றையும் தன்னுடைய அபிப்பிராயங்களையும் தட்டுத்தடையின்றி தன் சினேகிதனுக்கு நன்ருய்த் தெரிவிக்கிருன். சுருங்கச் சொல்லுமிடத்து தன்னுடைய மனதையே தன் சினேகிதனிடத்தில் ஒப்புவிக்கிருன். கேட்டுக்கொண்டிருந்த சினேகிதனும் தன் அபிப்பிராயங்களையும் அப்படியே வெளியிடுகிருன். இவ்விதமாக நல்லோர்களுடைய நட்பானது சந்தோஷத்தை யுண்டுபண்ணி மனக்கவலை துன்பம் முதலானவற்றையும் மாற்றுகிறது. இன்னமும் சிநேகிதர்கள் நாம் தீய வழிகளில் பிரவேசிக்காதபடி நல்ல புத்திமதிகளைச் சொல்லி நல்ல கருமங்களையே செய்யும்படியாகவும் செய்கிருர்கள்.

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு."

நல்லோர்களுடைய கேண்மையானது நகை செய்வதற்கு ஏற்றவை சொல்லி நமக்கு நகை உண்டாக்கும்படி செய்விப்பதற்காக அல்ல. ஆனல் பழி பாவம் தரும்படியான கருமங்கள் நாம் செய்யாதபடி கண்டித்துப்புத்தி சொல்லுவதற்காகவே. என்பதாம்.

ஸ்திரீ புருஷர்களுக்குள்ளிருக்கும் அவ்வளவு அன்பும் பெற்ருேர்களிடமிருக்கும் வாஞ்சையும் அன்னை தயையும் உண்மையான சினேகிதரிடம் உண்டாகிறது. ஒருவருக்கொருவர் உண்டாகும் மனப்பொருத்தமாவது தான் வேறு தன் சினேகிதன் வேறு என்று எண்ணுவதற்கு இடங்கொடாது.

ஒருவருடைய நட்பைப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சியொத்தல் என்ற மூன்று காரணங்களினுலும், சம்பாதித்துக்கொள்ளலாம். ஒருவனுக்கு மனதில் தோன்றுவதே மற்றவனுக்குத் தோன்றுவது, ஒருவனுக்குப் பிரிய மிருப்பதிலே மற்றவனுக்குப் பிரிய மிருப்பது ஆக இப்படி இருவர்கள் ஒரே உணர்ச்சி யுடையவர்களாயிருந்து இஷ்டர்களாயிருத்தல் சிறப்புடையது.

I. புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.

II. நற்று மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை யுகக்கும் பிணம்.

III. பலநாளும் பக்கத்தா ராயினும் நெஞ்சிற்
சிலநாளு மொட்டாரோ டொட்டார்—பலநாளும்
நீத்தா ரெனக்கை விடலுண்டோ தன்னெஞ்சத்
தியாத் தாரோ டியாத்த தொடர்பு.

மனப் பொருத்தமுடையவர்கள் நெடுநாள் பிரிந்திருந்தாலுங் கூட சிநேகிதரைக் கைவிடமாட்டார்கள். நற்குணம் வாய்ந்தவர்களுடன் சிநேகித்தல்வேண்டும்.

ஒருவன் குணத்தையும், (குலத்தையும் குற்றமில்லாதவர்கள் உலகத்தி லில்லாததால்) பொறுக்கத்தக்க குற்றமுடையவர்களையும், சுற்றத்தாரோடு கட்டுண்டிருப்பவர்கள் நட்பாளியர்களோடும் கட்டுண்டிருப்பார்களாதலால் அப்பேர்க்கொத்தவர்களையும் அறிந்து சிநேகஞ் செய்யவேண்டும். குற்றம் பார்க்கில் சுற்றமில்லையென்பது பழமொழி. இன்னும்

குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டும் நட்பு.

உயர்ந்தகுடியிற் பிறந்து உலகர்பழி சொல்லாதவண்ணம் நற்குணமாய் நடப்பவனுடன் சிநேகம் செய்யவேண்டும். அப்படிச் சிநேகித்தவர்களுடன் பழகுவதாவது

"நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு."

நூற்பொருள்கள் கற்குந்தோறும் ஒருபோதைக் கொருபோது இன்பமிகுதல்போலும், நற்குணமுடையவர்கள் சிநேகமானது மேன்மேலும் மிகுந்த இன்பத்தைத் தரும்.

[இன்னும் வரும்]

ஓ. ம. மூத்துராமலிங்கம்பிள்ளை,
சைவசித்தாந்தசபை நிருவாகசபையாரிலொருவர்,
தூற்றுக்குடி.

தேனும் தேனீயும்

[முன் தொடர்ச்சி]

"இதென்ன கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கிறது போல் இருக்கிறதே. தேனீயைக் கண்டு பிடித்து அதை எடுத்து பிற்பாடல்லவா அதன் முதுகில் பஞ்சுண்டையைப் பொருத்த வேண்டும்? தவிரவும் அது எடுக்கும் பொழுது படு கொட்டுக் கொட்டாமல் விடுமா?" என்று சிலர் ஐயமுறலாம். ஆனால் ஆஸ்திரேலியன சாமர்த்தியமே சாமர்த்தியம்! அவன் பஞ்சு கூட வீட்டிலிருந்து கொண்டுபோகமாட்டான். காட்டில் அது எதேஷ்டமாய் அகப்படும். பிசினும் அநேகமாய் எந்தமரத்திலும் கிடைக்கும். தேனீ எங்கிருக்கும்? அதுவும் வாசனைப்புஷ்பங்கள் பலவற்றில் ஒன்றிலேனும் இல்லாமல் போய் விடுமா? "மல்லிகையே வெண் சங்கா வண்டூத" என்று புகழேந்திப் புலவர் வர்ணித்தபடி அது பூவின் நாளத்திற்குள் தலையை நுழைத்துக் கொண்டு தலை கீழும் கால் மேலுமாக இருந்து தேனருந்திக்கொண்டிருப்பதைக் காண்பன். கண்டவுடன் என்ன செய்வன் என்று நினைக்கிறீர்கள்? தான் கொண்டுவந்த பஞ்சுண்டையைத் தொப்பென்று போடுவன் என்றா? அப்படிச்செய்பவன் பெருமூடனாயிருக்க வேண்டும். ஏனெனில் எவ்வளவு விரைவில் தொப்பென்று போட்டுக் கையை எடுத்தாலும் அதினும் விரைவாய்ப் பாய்ந்து தவறாமல் கொட்டும். இவ்விஷயம் ஆஸ்திரேலியனுக்குத் தெரியும். ஆதலின், அவன் அப்படிச் செய்யாது தன் வாய் நிறைய ஜலத்தை அடைத்துக்கொண்டு பிசினூட்டிய பஞ்சுண்டையும் கையுமாய்ச் சென்று மெய்மறந்து தேனருந்திக்கொண்டிருக்கும் ஈமேல் கொட்டித் தக்ஷணமே வெகு துணிச்சலுடனும் தீவிரத்துடனும் ஜலத்தை உதறிக்கொண்டிருக்கும் ஈயைக் கையில் எடுத்து அதி சாமர்த்தியத்துடன் அதன் பேரிற் பஞ்சுண்டையைப் பொருத்திக் கீழே விடுவன். சற்றும் எதிர் பாராது தன்பேரில் வருஷிக்கப்பட்ட ஜலத்தை அது ஆத்திரத்துடனும் உதறி உதறித் துடைத்துக்கொண்டு அரைக்கணமும் அங்கு நில்லாமல், தானறியாமலே தனக்கும் தனது வாசஸ்தலத்திற்கும் தனது உடைமைக்கும் இனத்தாருக்கும் பெருங்கேட்டைத் தலைப்பில் முடிந்துகொண்டு தனது உறைவிடம் நோக்கி ஓடும். இங்ஙனம் அதன் வேகமுங் குறைபட்டு அடையாள முள்ளதும் ஆகிவிடவே, ஆஸ்திரேலியன் பஞ்சிலேயே திருஷ்டியாய் அதனைத் தொடர்ந்து சென்று கூட்டைக் கண்டுபிடித்து ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர். அல்லது கூடு செங்குத்தான பாறைகளிலேனும் முள் மரங்களிலேனும் கட்டப்பட்டிருந்தால் அதனை வில்லுண்டையால் வீழ்த்தித் தேன்கொள்வன்.

ஈக்களை வளர்த்துத் தேன் எடுத்தல்.

இதுகாறும் நாம் சொல்லி வந்தவை காட்டீக்களினின்றும் தேன் பெறும் விதங்களே. தேனீக்களை வளர்த்தும் தேன் கொள்ளுகின்றனர் என்று நாம் இப்பொழுது சொல்லாமலே விளங்கும். ஏனெனில் முன் போரிடத்தில், தேன்றேர்க் குறவர் தேன் கொள்வது போற் கொள்ளாமல் நாகரீகமுள்ள ஜனங்கள் மதுகரங்களைச் சர்வ ஜாக்கிரதையுடன் வளர்த்துத் தேன் பெற்று கோடீசுவரர்களாயிருக்கிற விஷயம் கூறியுள்ளோம்

XVI. மதுபானிகள்.

மனிதன் ஒருவனுக்குத்தானா ஈசுவரன் ருசியுள்ள நாக்குக் கொடுத்திருக்கிறார்? அவனிலும் அதிக ஆவலுடன் தேனைச் சுவையறிந்து உண்ணக் கூடியவை பலவுள. அவற்றுட் சில கூறுவம்;—

தேன் காட்டி:—இதனைப்பற்றி வேண்டுவன விரித்துரைத் தாயவிட்டது. அது மனிதன் அகப்படாவிடில் ஓர் வகைக் கிரியின் உதவியினாலும் தேன்மட்டுமேயன்றி தேனீயும் பெறுமாம்.

ரேட்டல்:—இதுதான் "தேன் காட்டி" க்கு உதவிசெய்யும் ஓர்வகைக் கிரி. இதற்கு தேனும் தேனீயும் மிகப் பிரியம். இது விசேஷமாய் ஆபிரிகாவில் காணப்படும். இதற்குப் புற்றுத்தேன் மிகுதியாய்க் கிடைக்கும். தேனீக்கள் இதனைக் கொட்டிய போதிலும் அவ்வளவாய் வேதனை பெறுதாம். இது தானாகவே தேன்கூடு இருக்குமிடந்தேடிச் செல்லுமென்று சிலரும், "தேன்காட்டி" யின் மூல மாகத்தான் தெரிந்து கொள்ளும் என்று வேறு சிலரும் கூறுகின்றனர்.

கரடி:—இது மரம் ஏறக்கூடிய பிராணியாதலால் மரக்கிளையிலேனும் மரப் பொக்குகளிலேனும் வைத்திருக்கும் தேன் கூட்டைத் தனது சடைபற்றிய கையால் பற்றி எடுத்துப் பிழிந்து, பொன்னிறத்த தேன் சொட்டச் சொட்டக் களிறத்த சிந்தையுடன் விழுங்கும். பாவம்! சிற்றீக்கள் செய்யக்கூடியது என்ன? கொட்டத்தானே செய்யும். அப்படிக் கொட்டித்தான் பயனென்ன? தாமே உயிர் இழக்க வேண்டியது தான். ஏனெனில் கரடிகள் வேதனை சகியாது வெகு உக்கிரகத்துடன் ஈக்களைப் பிடிப்பிடியாய்ப் பிடித்து நசுக்கிப் பிழிந்து கொன்று விடும்.

தேன் எறும்புகள்!:—இதுகாறும் தேன் ஈக்களே தேன் சேர்ப்பன என்று எண்ணிக்கொண்டிருக்கும் நம்மவர்கள் எறும்புகளும் தேன் சேர்க்கிறதென அறிய ஆச்சரியப்படாதிரார். ஆனால், இப்பேர்ப்பட்ட

எறும்புகளை இந்தியாவிற் காண்பரிது. வட அமெரிக்காவில் மெக்ஸிகோ நாட்டிலும் ஐக்கிய மகாணங்களின் (United States) தென்மேற்கு பாகங்களிலும் பிற இடங்களிலுமே இவ்வெறும்புகள் மிகுதியாயுள்ளன. ஆனால், இவை ஈக்களைப்போல் பிரத்தியேகமாய்க் கூடு கட்டி அதில் அறைகள் அமைத்து அவற்றுள் தேனை நிரப்புவதில்லை. உருவத்தில் நமது கட்டெறும்பு போன்ற இவ்வெறும்புகளின் சரீரத்திலேயே இடுப்பிற்கப்பால் ஓர் பை உண்டு. ஈக்களைப்போலவே இவைகளும் மலர்களில் உள்ள இனிய சாரத்தை இரைப்பையிற் போக்கித்தேனாகமாற்றி அதனை இரைப்பையில் நிரப்பும். தேனால் நிரம்பும் பொழுது இரைப்பைகள் பெருங் கழற்சிக்காய் அவ்வளவு பருமனாகி உப்பும். இவைகளை ஈசல், சுண்டைக்காய் அரிசி முதலியன போன்று படிப்படியாய் அமெரிக்கரும் மெக்ஸிகரும் அளந்து விற்பர். அவற்றை வாங்குவோர் அவற்றின் பைகளை மட்டும் கிள்ளி எடுத்து அவற்றைப் பிழிந்து தேன் எடுப்பர். இத்தேனால் ஓர் வகை சாராயம் செய்யப்படுவதும் உண்டு. இவ்வெறும்புகளின் தேன் நிரம்பிய பைகள் அவ்வூரில் உள்ள பெரிய மனுஷர்களுக்கு வெகு தாராளமாய் விருந்தளிக்கும்பொழுது செலவு செய்யப்படும். அவர்கள் அப்பைகளை உறிஞ்சிச் சப்பி தேனருந்தி தோலை எறிந்து விடுவர். நமக்கு ஆடுமாடுகள் பால்தர சிருஷ்டிக்கப்பட்டிருப்பது போல் இவை ஏனைய் எறும்புகளின் உபயோகத்திற்காகவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. வேண்டும்போதெல்லாம் ஏனைய எறும்புகள் இத்தகைய எறும்புகளினின்றும் தேன்பெற்று வளரும். எறும்புக் கூட்டம் ஒவ்வொன்றற்கும் தனித்தனியாய்த் தேன் எறும்புகள் உண்டு. இவை ஏனைய எறும்புகளுக்கு மிகவும் உபயோகப்படுவதால் இவற்றை அவ்வெறும்புகள் பொன்போற் போற்றிவளர்த்து தாம் செல்லும் இடந்தோறும் இட்டுச்செல்லும். சூழ்ச்சியுளங்கொடு துரோகசிந்தையராய் அயோக்கியர்கள் அயலார் உரிமையை அபகரிப்பதுபோல், ஒரு கூட்டத்துத் தேன் எறும்புகளை மற்றக்கூட்டத்து எறும்புகள் பொருது அபகரிப்பதுமுண்டு. நாம் எடுத்துப்பேசும் விஷயம் எறும்பன்று. ஆதலின் இம்மட்டோடு நிறுத்துவம்.

XVII. தேனீக்களின் சத்துருக்கள்

எதிலும் தலையிட்டுக்கொண்டு இடர் இழைத்துவரும் மனிதன் இதன் பரமசத்துருஎன்று சொல்லித்தானா தெரியவேண்டும்? கரடி தேன்காட்டிகிரி முதலியனவும் இவற்றின் சொத்தை அபகரித்துக்கொண்டு அவைகளைக் கொன்றுவிடுகிறதையுங்கண்டோம். முற்கூறியவைகளைத்தவிர வேறு பல சத்துருக்கள் இதற்குண்டு. உதாரணமாக:

குளவியும் வண்டும் கூட்டங் கூட்டமாய் வந்து தேனீக்களுடன் சண்டைதொடுத்து இருகக்ஷியிலும் அனேகம் மடியும். தகசு, எலி, சுண்டெலி இவை ஈக்களை எக்காலத்திலும் எதிர்த்துப்பொரும். தூக்கணங்குருவி, ஊர்க்குருவி, குயில், கோழி வாத்து, ஈக்கொத்தி, பல்லி, காட்டோந்தி, தேரை, பெருஞ்சிலம்பிமுதலியனவற்றுள் சில தேனீக்களை ஒவ்வொன்றாகவும் வேறுசில பலவாகவும் கொத்திக்கொத்திவிழுங்குமாம்.

பூச்சி, புழு, விட்டில் முதலியன செய்யும் ஹிம்சை சொல்லிமுடியாது இவை உபாயமாய் தேனீக்கள் அறியாது உட்புகுந்து கூட்டிற் பல்லாயிரம் முட்டைகளிடும். இம்முட்டைகள் கிருமிகளாகி கூட்டை அடியோடு அரித்து அழித்து ஈக்களை இருப்பிடம்விட்டோடச்செய்யும்.

[இன்னும் வரும்]

M. கோபாலகிருஷ்ணையர்,
அக்ராஸநாதிபதி, மாணவர் செந்தமிழ்ச்சங்கம், மதுரை.
&
Asst. Master A. M. High School, Madura.

சிந்தாமணி சரித்திரம்.

[முன்தொடர்ச்சி.]

"என் கண்ணே, தயை, கருணை, கிருபை, சாந்தி என்னும் சொற்கள் வடமொழியில் பெண்பால் வசனங்களாகையால் தாயென்கிற உயர்ந்த பதவிக்கு உரிமை பெற்ற பெண் பிறவிக்கே அந்த மேலான குணம் இயற்கையாய் அமைந்திருப்பது போலும். நீ மொழிந்தபடியே அம்பிகையை மனத்துட் கருதிப் பாயசத்தை அப்பெண் குயிலுக்கு ஊட்டுவாயாக' வென்று மனங்களித்துச் சொன்னான். உடனே அக்குலமங்கை அச்சிறிய பெண்ணைக் கையாற்றூங்கி தன் மார்பு மீது அணைத்துக் கொண்டு பாயசத்தை அவள் வாயிற் செலுத்தி ஊட்டுவித்தனள். அக்கணமே அவ்விள' மங்கை மயக்கம் தீர்ந்து கண் விழித்தவுடன் அவளை நோக்கி அந்தப் புண்ணியவதியானவள்.

"அம்மா, நான் அருமையாய்ச் சமைத்த பாயசம் உன்னாற் பயன் பெற்றது. ஈசுவரியும் திருப்தி அடைந்தாளென்பதற் கையமில்லை. இதோ

வெகு சமீபத்தில் எங்கள் கிருகம் இருக்கின்றது. நீ அங்கு வந்து முற்றிலும் களைப்பாறிய பிறகு உன் வரலாறுகளை உரைத்தால் நீ வேண்டும் உபகாரத்தை நாங்கள் செய்வோம்'' என்று இனிய மொழியால் அவளை உபசரித்து அவளைக் கைத்தாங்கலாக அழைத்துக்கொண்டு அப்பெருமாட்டியும், அம்மறையவனும் தங்கள் அகத்திற்குச் சென்றனர். இதைப் பார்த்திருந்த அந்தண குமாரன் கைகொட்டிச்சிரித்து அவன் நண்பனை நோக்கி

''கனகசபை, இதென்ன மடமை? அக்கிழவனும் கிழவியும் எவ்வளவு மூட பக்தியில் ஆழ்ந்திருக்கின்றார்கள். ஆலயத்திற்குள்ளிருக்கும் ஒரு கல்லுக்குப் பாயசம் வேண்டுமாம். அது மட்டுமன்று. அப்பாயசம் அந்தப் பெண்ணினுடைய வயிற்றுட் புகுந்தவுடன் அந்தக் கல் அதை நன்குணர்ந்து திருப்தி யடைந்ததாம். நமது நாட்டினர் இவ்வாறு மதிகெட்டு மூடர்களாயிருக்கையில் நமது நாடு எவ்வாறு சிறப்பை யடையும். இவ்வலங் கோலத்தை ஒரு வெள்ளைக்கார துரை மகன் பார்த்தால் நமக்கு எவ்வளவு மானக்கேடு'' என்றான். அது கேட்ட கனக சபை,

''கோபாலன், அதற்கு நாமென்ன செய்யலாம், நாமிருவரும் பாடுபட்டுக் கற்று பி. ஏ. பரீட்சையில் தேறியிருந்தும் ஆங்கிலேயர்கள் நம்மை மகிழ்கிறதில்லையே. நமது தேசத்தாருடைய மூடத்தனமான அனுஷ்டானங்களும் விபரீதமான மதாசாரங்களும் நமது ஆலயங்களுமல்லவோ நம்மை தலையெடுக்க வொட்டாமற் செய்கின்றன. அந்தப் பைத்தியகாரி அக்கல்லுக்குத்தான் பாயசம் கொணர்ந்தாளே. அந்த உத்தேசத்தையாவது பிடிவாதமாக நிறைவேற்றினளா, ஆங்கிலேய மாதர்கள் அப்படிச் செய்வார்களா? நினைத்தபடி நிறைவேற்றுவ தல்லவா அவர்களுடைய உயர்ந்த பண்பு. நமது தேசத்து மாதர்களுக்கு அந்தமனவலியும் ஊக்கமும், எப்படிப் பொருந்தும். அவர்கள் வயிற்றில் பிறந்த ஆண்மக்களும் அவ்வாறுதானே யிருப்பார்கள? என்று சொல்லி மிகுந்த அருவருப்புடன் தன் பல்விளக்கி மிந்த குச்சியை அசட்டையாக எறிந்தான். அது அவன் பக்கத்தில் தியானம் செய்துகொண்டு வீற்றிருந்த பிராமணோத்தமன் தலையில் விழுந்தது.

உடனே அந்தப்பிராமணன் மிக்க வருத்தத்துடன் அவ்விருவர்களையும்நோக்கி நீங்கள் மகா புத்திமான்களாகையால் இந்த உயர்ந்த காரியம் செய்தீர்கள் நீங்கள், படித்தவித்தைக்கு இதுவே பிரயோசனமாயிருந்தால் உங்கள் குடித்தனத்துக்கே ஒரு குறைவுமில்லை, ஒரு நீசன்கூட இந்தவேலை செய்யமாட்டானே, ஜபம் செய்கிற பிராமணன் தலைதவிர பற்குச்சி யெறிய வேறு தகுதியான இடம் உங்களுக்கு அகப்படவில்லை. இது தேவாலயமாயிற்றே. இவ்விடத்திலா உட்கார்ந்துகொண்டு பல் விளக்குகிறது? என்று

உங்களுக்குத்தோன்றவில்லை. இதுமட்டுமா? ஒரு நாழிகையாக சுவாமி கல்லென்றும் அதற்கு பாயசத்தை உபயோகிப்பது மூட்த்தனமென்றும் சொல்லிக்கொண்டு எல்லாமறிந்தவர்கள்போற் பிதற்றிக்கொண்டிருக்கிறீர்கள். அந்தப்படிப் பில்லாத கிழவிக்கு அவளுடைய ஜென்மாந்திர சுகிர்தத்தினால் எவ்வளவு பக்தியும் ஜீவகாருண்யம் நிறைந்த சிந்தையும அமைந்திருக்கின்றன. நீங்கள் கற்றது மேன்மையான கல்வியாயிருந்தால் நீங்கள் இப்படிக்கேடுகெட்டு நிற்பீர்களா? இந்தப்படிப்புக்காகத்தானே உங்களைப்பெற்றவர்கள் பங்கைவிற்று மனையை விற்று உண்ணச்சோறில்லாத ஏழைகளாக ஆகின்றார்கள். நமது நாட்டுக்கு வந்திருக்கும் எளிமைக்கு இந்தப் பாழான படிப்பல்லவோகாரணம். நீங்கள் பிறகு சம்பாதித்தாலுமென்ன உங்களுக்குத்தாய் தகப்பன்வேண்டாம். உற்றார் உறவினர்வேண்டாதவர்கள். தெய்வம் கிடையாது. ஜாதிவர்ணாசிரமம் தொலைந்தது. இன்று காலையில் யார்முகத்தில் விழித்தேனோ? என்னுடையஜபத்திற்குப் பங்கமும் எனக்கு அநாச்சாரமும் சம்பவித்தன. என்று சொல்லிக்கொண்டு அந்தமறையவன் அவ்விடத்தைவிட்டுப் போக எழுந்திருந்தான்.

அப்பொழுது அவ்விருவர்களும் கல கலவென்று சிரித்துப் பரிகாசம் செய்தார்கள். கோபாலன் அவரை நோக்கி.

"இராமையரே உமக்கேன் இவ்வளவு கோபம். ஒரு கருங்கல்லுக்குப் பூசைசெய்து மாலைபோட்டு தெய்வமென்று வணங்குகிறீர்களே, இந்தக் குச்சிமட்டும் என்ன பாவம் பண்ணிற்று, அதையும் ஒரு தெய்வமாக நினைத்து விட்டால் இவ்வளவு கோபத்திற்கிடமில்லை. அதுகிடக்கட்டும். எங்கள் படிப்புக்கும் பற்குச்சியை யெறிந்த தற்கும் என்ன சம்பந்தம், ஒரு முகாந்தரமுமில்லாமல் நமது நாட்டுக்கு மேன்மையை உண்டுபண்ணுகிற ஆங்கிலேய வித்தையை வாயில் வந்தபடி யேன் இகழ்ந்துபேசவேண்டும், அந்தக் கிழவி அவளுடைய செய்கையின் சுபாவத்தை அறிந்து செய்தாளா? என்னவோ ஒருவரைப் பார்த்து ஒருவர் மூடத்தனமாக அனுஷ்டிப்பது நமது தேசத்தின் வழக்கந்தானே, விபூதிதரிப்பதும், நாமமிட்டுக்கொள்ளுவதும், பூசைபுரிவதும், ஆலயந்தொழுவதும் ஒருவரைப்பார்த்து மற்றொருவர் கொள்ளும் அனுஷ்டானங்கள் அல்லவா? கிருஷ்ணன் அவ்விதம் சொன்னான். நாரதர் அவ்வாறு புகன்றார். இன்னொருவர் ஏட்டில் எழுதினார் என்பதைத்தவிர யார் ஒவ்வொரு விஷயத்தையும் பரீட்சித்துக் கண்டறிந்தார்கள்? இந்தக் கட்டுக்கதைகளை அனுஷ்டித்தாலென்ன? தாத்தா, அதிகமாய்ப் பேசினால் உமக்குக் கோபம் வருமே யல்லாமல் ஒரு கேள்விக்காவது பதில் சொல்ல முடியாது" என்று சொல்லிவிட்டுத் தன் சிநேகிதனைப் பார்த்து இரகசியமாய்க் "கனகசபை, இந்தக் கிழவர் நம்மை இல

குவில் விடமாட்டார். அவர் மிகுந்த வாயாடி, சளசளவென்று பேசிச் சண்டைபோடுவர்" என்றுரைத்து அவனை அழைத்துக்கொண்டு கோபாலன் தூரத்திலுள்ள வேறு ஒரு இடத்துக்குப் போய்விட்டான். உடனே இராமையர் அவர்களை நோக்கி,

"ஏனப்பா! ஓடுகிறீர்கள் அகம்பாவத்துடன் தாறுமாறாகப் பேசிவிட்டு என் மறுமொழிகளைக் கேட்பதற்குப் பொறுமை யில்லாமல் திடீரென்று போகிறீர்களே. இது தானே உங்கள் இலட்சணம். அவ்வளவுக்குப் பொறுமை யில்லாவிடில் வாயை அடக்கிக் கொண்டிருக்க வேண்டும். இருக்கட்டும். சமயம் வராமற் போகாது. அப்பொழுது உங்களுக்கும் உங்களைப்போன்ற மூடர்களுக்கும் அறிவு வரும்படியாகச் செய்கிறேன். என்று சொல்லிவிட்டு அளவில்லாத மன வருத்தத்துடன் அந்த அருவியில் ஸ்நானம் செய்துவிட்டுத் தன் அகத்துக்குச் சென்றார்.

[இன்னும்வரும்]

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

இந்தியாவும் தொழிற்பாடசாலைகளும்.

[முன் தொடர்ச்சி]

Mr. Charles Godfrey Leland M. A. F. R. L. S. என்ற ஐரோப்பிய விற்பன்னர் இததாலியிலிருந்து 1901-ம்வரு ஜுன் மீ 22உ எனக்கு எழுதிய கடிதத்திற்கண்ட விஷயங்களின் சுருக்கம்வருமாறு:—

இந்தியாவில் "கைத்தொழிற் கல்வியின் Technical E[...]uca-
tion) அபிவிருத்தியின்பொருட்டுத் தாங்கள் 1901-ம்வ[...] ஏப்
பிரல்மாதம் 30உ எனக்கு எழுதிய கடிதங்கிடைத்துப் [...]ார்வை
யுற்று மகிழ்வும் ஆச்சரியமும் அடைந்தேன். இம்ம[...]திரியான
எண்ணம் என்போல் தங்களுக்கும் தோன்றினமை[...] அதற்கு
க்காரணம். இவ்வாறு எண்ணினவிஷயமே தங்க[...]நக்கு ஒரு
பெரிய கவுரவத்தை உண்டாக்கி விட்டதென்று [...]எக்கிறேன்

ஆயினும் இது சம்பந்தமான என் முயற்சிகளிற் சில அடியில் வருமாறு கூறுகின்றேன்.

இவ்விதமான ஒரு நூதனவிஷயம் என்னல் ஜனங்களின் உபகாரார்த்தமாய் வெளியிடப்பட்டுக் கனம்பொருந்திய Miss. R. Jebb என்னும் அம்மாளால்உபயோகத்துக்குக்கொண்டு வரப்பட்டு அதன்மூலமாய் ஒரு Central association என்னும் பாடசாலை ஏற்படுத்தி அதிலிருந்து அநேகவிதமான தொழிலாளிகளைப்பலவிதமான படிப்புககளில் பயிற்றித் தேர்ந்தபின் அப்பாடசாலையிலிருந்து அதற்கு உதவிப் பாடசாலைகளாக ஏற்பட்டிருக்கும் பாடசாலைகளுக்குத் தக்கவண்ணம் படித்துத் தேர்ந்தவர்களை யனுப்புவித்து அவ்வவ்விடங்களிலுள்ள சிறுவர்களுக்குப் போதனு சக்தியை உண்டுபண்ணினதினல் ஜனங்கள் அடைந்த பலனுனது எல்லோரும் மகிழ்ந்து மெய்ச்சதக்கதாயிற்று.

இதற்கு உபகாரமாய் இராஜகுடும்பத்தைச் சார்ந்த கனவான்கள் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டு இவ்விதமான விருத்தியைச் சர்வ ஜனங்களுக்குள்ளும் பரப்பி நன்மை பயப்பதற்கு வருடந்தோறும் ஒரு கண்காக்ஷி சபை ஏற்படுத்தி வந்தமையால் தொழில்களின் அபிவிருத்தியானது உண்டாகிப் பல சிறுவர்கள் தேர்ச்சி யடையலானுர்கள்.

இதே மாதிரியான ஒரு பேருபகாரமான விஷயத்தைத் தங்களைப் போன்ற புத்தி சாதுரியம் நிறைந்த கனவான்கள் தேச நன்மை கருதி இந்தியாவில் நடத்தும்படியான ஏற்பாட்டைத் தேடுவார்களானல் இந்தியாவுக்கு எக்காலத்தும் குறைவுண்டாகவே மாட்டாது என்று நினைக்கிறேன்.

இம்மாதிரியானவிஷயம் ஒவ்வொரு ஜில்லாவிலும், தாலுகாவிலும், கிராமத்திலும், ஏற்படுமானல் அதனுலுண்டாகும் பயன் அளவிடக் கூடாததாகி விடும்.

இது விஷயமாக நான் இங்கிலாந்தில் முதல் முதல் ஆரம்பிக்கும் போது அடியில் வருமாறு ஆரம்பம் செய்யலானேன்.

பட்டணங்களைச் சேர்ந்த சில கனவான்களின் உதவியைக் கொண்டு ஒரு சிறிய கைத்தொழிற்பாடசாலை ஏற்படுத்தி அதில் கற்பவர்களுக்கு முதல் முதல் சொற்பம் பட மெழுதலும் (Drawing) டிஸைனும் (Design) தக்க தேர்ச்சிபெற்றவர்களைக் கொண்டு கற்பித்து அதன்பின் மாடெல்லிங் (Modelling) சரிகை வேலைப்பாடுகள் (Embroidery) போன்ற கடின மான விஷயங்களைப் போதிதது பயிற்றிவரும் பக்ஷத்தில் இவ் விந்தியாவிலுள்ள சிறுவர்கள் இயற்கையிலேயே மற்றைய வெளித்தேசத்தாரினும் மேன்மையுடையத், தக்கவர் ஆவார்கள் என்று எனக்குத் தோற்றுகிறது.

நான் இங்கிலாண்டு, அமெரிக்கா, ஹங்கேரி என்னும இட ங்களில் கைத்தொழில்களையும், சில்லறைத்தொழில்களையும், பர வச்செய்யும் பொருட்டு கைக்கொண்ட முயற்சிகள் இந்தியாவி லும் கைத்தொழில் விஷயமாய் ஏற்படுமானல் அதே பலன் களை இந்தியா தேசத்தாரும் அடைவார்களென்பது திண்ணம். இம்மாதிரி முயற்சிகள் இங்கிலாந்து, அமெரிக்கா, ஹங்கேரி முதலிய இடங்களில் "Leland ஏற்பாடு" எனப் பெயர் பெற்று வழங்கி வருகின்றது. அவ்விஷயம் செய்து பார்க்கும் பக்ஷத்தில் உபயோகமாக முடியுமே யொழிய ஒருகாலும் வீணுகாது.

சிறுவர்கள் கைத்தொழில் சிறிது பழகியபின்னர் பிரதி மைகள், கட்டிடங்கள், பாலங்கள், இன்னும் இவை போன்ற தொழிலில் உபயோகப்பட்டு வரும்படியான சக்தியை உண் டாக்கலாம். அதன்மேல் டில்லிமாநகர் முதலிய இடங்களில் ஸோப் ஸ்டோன் (Soap Stone) களினுல்செய்கிற வேலைகளி லும், மெடல், (Metal) பித்தளைத் தகடு (Sheet brass) முத லான (Chasing) வேலைகளிலும் தேற்றலாம். அவ்விதம் தேற் றப்பட்ட அவர்கள் இதர தேசத்தாரைவிட அதிக புத்தி சூட் சுமத்தைச் செலுத்தத் தக்கவராவார்கள் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. ஆனல் இதரதேசத் தொழில்கள் சம்பந்தமன்றிச் சுதேச முறையை அநுசரித்தே நடத்தவேண்டும்.

இதரதேச விஷயங்களைக் கலப்பீர்களாகில் உங்களுடைய தேசாசார இலக்ஷணங்கள் போய்விடும். இங்கிலாந்து, பாரிஸ் முதலிய நகரங்களின் கைத்தொழில் சம்பந்தமான விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்க்குங்கால் பல தேசங்களிலுள்ள விஷயங்களின் அழகையும் அலங்காரத்தையும் ஒன்று சேர்த்து அமைக்கப்பட்டனவாம். இந்தியாவில் நாளதுவரை கைத்தொழில் விஷயமாய் இதரதேச சம்பந்தமே கிடையாது. அதனால் நீங்கள் உங்கள் சுதேசத்துக்குரிய விஷயங்களையே அனுசரித்து வருவீர்களானால் எல்லாத் தேசங்களைக் காட்டிலும் இந்தியா முதன்மையாகவே இருக்கும்.

சுதேச விஷயமான கைத்தொழிலில் பிள்ளைகள் சரிவரத் தேர்ச்சியடைந்த பின்னர் ஐரோப்பா முதலிய இதரதேச விஷயங்களை அனுசரித்துப் பழகலாம். இவ் விஷயங்களை நன்கு கவனியாவிடில் இந்தியாவின் கைத்தொழில் மகிமை போய்விடும் என்பது திண்ணம்.

[இன்னும் வரும்.]

கே. வி. வெங்கட்டரமணையர்,
Government School of Art, Calcutta.

மனிதனது எழுகூறு.

[முன் தொடர்ச்சி]

இப்பால் நாம் மனசின் பிரவிர்த்தியைப் பற்றிச் சற்று விசாரிப்பாம். பூலோக வாழ்க்கைக்காக வரும் ஒவ்வொரு பிறவியிலும் ஐந்தாவது கூறாகிய மனசு மேல் கீழ் என இருபகுதித் தோற்றமுள்ளதாயிருக்கின்றதென்றும், மேல் மனசு பரநாட்டமுள்ளதென்றும் விஞ்ஞானம் என்று சொல்லப்படுவதென்றும், கீழ் மனசு பிரபஞ்ச நாட்டம் அல்லது இகநாட்டமுள்ளதென்றும் அதாவது பிரபஞ்ச போக போக்கியங்களைக் கிரகித்து அனுபவிப்பதற்கானதென்றும், இது நான்காவது கூறாகிய காமத்துடன் கலந்து காம மனசு என்று இசைவான பெயர்கொண்டு மனிதனுடைய

மூளையிலும் நரம்பு மண்டலத்திலும் அது பிரவிர்த்தித்துத் தொழில் செய்கின்றது என்றும் நாம் முன் கண்டோம். விஞ்ஞானத்தின் செயலுக்கும் கீழ் மனசு என்னும் **அந்தக்கரணத்தின்** செயலுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெளிவாய் விளக்கும் பொருட்டு நமது ஆராய்ச்சியைச் சற்று ஆழ்ந்து கொண்டு போதல் அவசியமாயிருக்கின்றது. அப்பொழுது மனிதனுக்குள் மனம் என்னும் அந்தக்கரணம் செய்யுந் தொழிலைப்பற்றி இப்பொழுது அநேகருக்கு இருக்கும் கலவரமும் கருகலும் நீங்கிச் சற்றுத் தெளிவு பிறக்கும்.

அன்னமயகோசமாகிய திண்பூதவுடலைப்பற்றி ஆதியில் விவகரித்தபொழுது அது கண்ணறைகள் என்று சொல்லப்பட்ட புழுக்களால் கட்டப்பட்டது என்று கூறினோம். மனிதனுடைய தேகத்தில் பலவிதத் தொழில்களுக்குப் பலவித கருவிகளிருப்பதில் மூளையும் நரம்பு மண்டலமுமே உணர்வுக்கான கருவிகளாம். இவைகளின் கண்ணறைகள் ஒவ்வொன்றும் மற்ற உறுப்புக்களின் கண்ணறைகளைப் போலவே பல நுண்ணிய துகள்கள் அல்லது பேரணுக்கள் சேர்ந்துள்ளன. பேரணுவை இங்கிலீஷில் "மாலிக்யூல்" (Molecule) என்பார்கள். ஒரு கண்ணறையைக் கட்டும் பேரணுக்கள் ஒன்றோடொன்று நெருங்கிச் சேர்த்து தொட்டுக்கொண்டிருப்பதில்லை. அவைகளுக்கிடையே வெளி அல்லது இடம் இருக்கின்றது. ஆதலால் அவைகள் முன்னும் பின்னும் அசைய இடமுண்டு. அசையும்படி செய்தால் அவைகள் முன்னும் பின்னும் ஆடும். அதாவது ஸ்புரிக்கும். வாஸ்தவத்தில் அவைகள் எப்பொழுதும் இப்படி ஸ்புரித்துக் கொண்டே யிருக்கின்றன. பேரணுக்கள் இடைவெளி கொண்டிருந்தும் அவைகள் கும்பலாக ஒருமித்துக் கண்ணறையா யிருப்பதெப்படி யெனில் அவைகளை ஏகசைதன்னியத்தின் அனேக சக்திகளில் ஒன்றாகிய கவர்ச்சிச் சக்தி அதிக தூரம் பிரிந்து தனித்தனியாய்ப் போகாதபடி செய்துகொண்டிருக்கிறது.

பேரணுச் சலனமானது நித்திய ஏகசைதன்னியத்தின் மிகத்தாழ்ந்த ஸ்தூல பிரபஞ்சமய சொரூபம் என்றும் அச்சைதன்னியமே "மகாமூச்சு" என்னும் இயல்பில் சலனமென்றும் அண்டத்தின் ஒவ்வொரு தலத்திலுமுள்ள சலனங்களுக்கெல்லாம் ஆதிகாரணம் என்றும் ஹேலேநாம்பாள் கூறுகின்றனள்.

கீழ்தரமனசாகிய காமமனசானது உணர்கருவியாகிய மூளை நரம்பு மண்டலங்களின் கண்ணறைகளின் பேரணுக்களின்மேல் தாக்கி அவைகளை ஸ்புரிக்கும்படி செய்து பகிர்முகத்தில் செல்லும் அந்தக்கரண அறிவை எழுப்புகின்றது. மனசு தனியாய் இப்பேரணுக்களைத் தாக்கமாட்டாது.

ஆனால் அதன் கிரணமாகிய கீழ்தர மனசு அல்லது அந்தக்கரணம் புவர்தலவஸ்துவாகிய அப்பு தத்துவத்தைப் போர்த்திக்கொண்டு காம சுபாவங்களுடன் ஒன்று சேர்ந்து இருக்கும் நிலையில் மூளை நரம்பு மண்டலங்களின் பேரணுக்களைத் தூண்டி ஸ்புரிக்கும்படி செய்ய வல்லமை பெற்று மூளைப்பிரஞ்ஞை யென்னும் ஜாக்கிர அறிவு அல்லது நனவுஞானத்திற்குக் காரண மாயிருக்கின்றது. காமமனசின் இச்செயலைத்தான் அந்தக்கரண விருத்தி யென்று சாதாரணமாய்ச் சொல்லுவது. இந்த அந்தக்கரண சக்தி தான் சகல சித்த விருத்திகளுக்கும் காமக் குரோதாதி விகாரங்களுக்கும் காரணம். இச்சக்தி ஸ்தூல கருவி மூலமாய்ப் பகிர் முகத்த்தில் வெளிப்படல் வேண்டியிருப்பதால் அச்சக்தியின் பிரசன்னங்கள் அவசியம் அக்கருவியினால் எல்லைப்படுத்தப்படுகின்றன. முன் இவ்விஷயத்தைப் பற்றிப் பொதுவாய்ப் பரும்படியாய்ச் சொல்லினோம். இப்பொழுது அதன் நியாயம் தெளிவாய்த் தோன்றும். மூளையின் பேரணுக்கள் மேன்மையானவையாயும் காமத்துக் குரிய முக்கிய கரணங்களாகிய ஈரல் மண்ணீரல் முதலியவைகளின் இயக்கமானது இக்கரணங்களை மூளையுடன் சம்பந்தித்து வைக்கும் நரம்புகளின் பேரணுக்கட்டைப் பழுதாக்காமலிருக்கும்படி சுகமாகவும் சுத்தமாகவும் இருக்குமானால் அப்பொழுது அந்தக்கரணவாசி யோட்டம் மூளையாகிய கருவியின் மேல் வீசும் பொழுது அந்த உண்மையில் * இன்னிசைக் காற்று வீணையினின்றும் அருமையான அதிமதுரப் பண்கள் எழும்புகின்றது. ஆனால் மூளையின் பேரணுக்கள் கனத்து உரத்துப் பருமனாயிருந்தாலும் அல்லது போதுமானவையின்றி அற்பமாயிருந்தாலும் அல்லது கள் சாராயம் முதலிய போதை வஸ்துக்களின் ஆவிகளினால் சரீரக்கட்டின் இயல்சீர் குலைந்திருப்பினும், அசுத்த உணவுகளாலும் அபரிமிதமான ஆகாரங்களாலும் அளவுகடந்த கலவைகளாலும் இரத்தம் விஷமேறிக் கெட்டிருந்தாலும் இந்த இன்னிசையாழின் நரம்புகள் அளவுக்கு மேற்பட்டுத் தளர்ந்தும் அல்லது இறுக்கமாகியும் அழுக்கினால் செறியப்பட்டுக் கடினமாகியும் அல்லது முரட்டுபயோகத்தினால் தேய்ந்தும் இருக்கின்றன. அப்பொழுது அந்தக்கரணவாசி அவைகளின் மேல் செல்லும்பொழுது அவைகள் நாதம் கொடாமல் ஊமையாயிருக்கின்றன அல்லது இசை பேதமாய் வெடித்த அமங்கல ஓசைகளைத் தருகின்றன; வாசி இடக்கமின்மையால் இப்படியாவதில்லை. ஆனால் நரம்புகள் பழுதான கருவியிலமைந்திருப்பதால் இவ்வித விபரீதங்கள் உண்டாவன.

---

* இது ஒருவித யாழ். இதைக்காற்று வீசும் பக்கம் வைத்துவிட்டால் அதன் தந்திகளுக்குக் குறுக்கே காற்று வீசிச் செல்லும்பொழுது மிகவும் இனிமையான நாதம் பிறக்கும்.

நாம் சாதாரணமாய் மனம் என்றும், சித்தம் என்றும் புத்தி என்றும் அந்தக்கரணம் என்றும் சொல்லும் வஸ்து ஐந்தாவது கூறாகிய மனசின் மங்கியும் அனேகமாய்த் திரிபு அடைந்தும் வரும் பிரதிவிம்பம் அல்லது சாயையென்று இப்பொழுது மிகத் தெளிவாய்த் தெரியவரலாம். காம மனசு என்பது மனிதனுடைய பகுத்தறிவு; ஆனால் அது பிரகிருதி தத்துவத்தினால் மூடப்பட்டும் அதனால் பந்தப்பட்டும் இப் பூலோக சம்பந்தம் பெற்றிருக்கின்றது. ஆகையால் அது பிரகிருதியின் அதிகாரத்திற்குட்படக்கூடியதா யிருக்கின்றது; அஃது இந்த மாயா தலத்தில் தொழில்செய்து நமது தேகத்தின் மூலமாய்ப்பிரசன்னமாகித் தன்னையே “நான்” என்னும் சைதன்னியமாக எண்ணிக்கொண்டு தான்வேறு என்று மற்றவர்களினின்றும் பிரிந்து நிற்கும் பாவத்தில் விழுகின்றது.

காமமனசானது மனிதனுடைய அநித்தியபாகமாகிய அவனது ஸ்தூல சரீரத்தில் தொழில்செய்தற் குரித்தானதென்றும், அது ஸ்தூல மூளையிலும் அதன் மூலமாகவும் வேலை செய்கிறதென்றும், அது அந்த மூளையின் பேரணுக்கள்மேல் தாக்குதல் செய்து அவைகளை ஸ்புரிக்கும்படி செய்கின்றது என்றுந் தெளிவாக அறிந்துகொண்டால் புனர் ஜன்மக் கொள்கையின் விர்த்தாந்தத்தைத் தெரிதல் மிகவும் சுலபமாயிருக்கும். புனர் ஜன்மத்தைப் பற்றி விஸ்தாரமாய் இப்பொழுது இவ்விடத்தில் சொல்லுவது தகுதியன்று. ஏனெனில் இப்பொழுது எடுத்துக்கொண்ட விஷயம் வேறு. புனர் ஜன்மத்தைப்பற்றித் தனியே பின்னால் பேசுவோம். ஆனால் இவ்விடத்தில் இப்பொழுது கவனிக்கவேண்டியதெல்லாங் கூடி கீழ்மனசானது. நித்தியமான ஞாதுருவினின்று ஒரு ஜன்மத்தில எடுத்துவந்த மானுஷிய தேகத்திற்கு விளக்கங் கொடுப்பதற்காகப் புறப்பட்ட ஒரு கதிர் என்பதும் மூளைப்பிரஞ்ஞை யென்னும் ஜாக்கிர அறிவில் நிகழும் சகல தொழில்களும் அந்தக் குறித்த ஒரு ஜன்மத்தில் உள்ள தேகத்தின் மூளையுடன் இனப்பட்டிருக்கும் தொழில்கள் என்பதுமேயாம். கீழ்மனசால் ஸ்புரிக்கும்படி செய்யப்பட்ட மூளைப் பேரணுக்கள் மாமிச பிண்டத்திலிருக்கும் ஸ்தூலப் பிரகிருதி வஸ்துவாலாய உறுப்புக்கள். அவைகள் இந்த மாமிசபிண்டம் கருத்தரிப்பதற்கு முன் மூளைப்பேரணுக்களாக இருக்கவில்லை. அல்லது அவைகள் இம் மாமிசபிண்டம் இறந்து சிதைந்துபோன பிறகாவது சொரூபமாறாமல் மூளைப்பேரணுக்களாகவே நிற்கிறதுமில்லை. தேகம் இறந்தபின் தேகத்தின் மற்ற பேரணுக்கள் போலவே மூளைப்பேரணுக்களும் பூதங்களாகப் பிரிந்து போகின்றன. ஆகையால் மூளைப்பேரணுக்கள் என்னும் சொரூபம் மாறிப்போகின்றது. ஒரு ஜன்மத்தில் எடுத்ததேகத்தின் மூளைப்

பேரணுக்களின் தொழிற்சலனம் அந்தத் தேகத்துடன் போய்விடுகின்றது. மறு ஜன்மத்தில் அந்த ஜீவன் எடுக்குந்தேகத்தின் பேரணுக்கள் நூதனமாய் உண்டாகின்றன.

கீழ்மனசு மூளையின் பேரணுக்களை ஸ்புரிக்கும்பொழுது அப்பேரணுக்கள் பதிலுத்தரம் அல்லது ஜவாபு கொடுப்பதுதான் பிரஞ்ஞை அல்லது அறிவு என்பது. இதுதான் ஜாக்கிர அறிவு அல்லது மூளைப்பிரஞ்ஞை. இப்பூதலத்தில் ஞாபகம் என்று நாம் சொல்லும் சக்தியும் கீழ்மனசின் தூண்டுகைக்கு இந்த மூளைப் பேரணுக்கள் செய்யும் ஜவாப்பைப் பொறுத்திருக்கின்றது. தொடர்ச்சியாய் ஜன்மங்கள் தோறும் எடுக்கும் தேகங்களுக்கு உணர்ச்சியையும் விளக்கத்தையும் கொடுக்கிறதற்காகத் தனது கதிரை வேளியே யனுப்பும் நித்தியமான **மேல்மனசின்** வழியாயல்லது வேறுவிதமாய்ப் பல்ஜன்ம தேகங்களின் மூளைகளுக்குப் பொருத்தஞ் செய்துவைக்கும் தொடர்பு கிடையாது.

ஆகையால் மனிதனுடைய அறிவானது ஸ்தூலம், காமமனசு என்னும் தலங்களினின்றும் மேலேறி **மேல்மனசின்** தலத்திற்குச் சென்றுலொழிய ஒரு ஜென்மத்தின் ஞாபகம் வேறு ஜென்மத்திற்குச் செல்லமாட்டாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும், ஒரு ஜென்மத்தில் அனுபவித்த சகல காரியங்களின் ஞாபகமும் மனிதனுடைய சங்கரமான சுபாவத்தில் தோன்றியழியும் பாகத்தைச் சார்ந்தது. ஆகையால் நித்தியமான ஞாதுருவின் தலத்திற்குத் தங்களறிவை உயர்த்திக்கொண்டுபோய்த் தோன்றியழியும் அநித்திய மனிதன் என்று சொல்லும் சரீரத்திற்கும் எப்பொழுதும் அழியாமல் நித்தியமாயுள்ள மனிதனுக்கும் பாலமாயிருக்கும் கதிரின் வழியாய் மேலும் கீழும் சஞ்சரிக்கும் வல்லமை பெற்ற மகான்கள் மாத்திரம்தான் சென்றுபோன ஜென்மங்களின் ஞாபகத்தைப் பெறுவார்கள். மாமிசபிண்டம் என்னும் மண்பிண்டத்தை உறையாக வைத்து அதற்குள் நாம் சிக்கியிருக்கும்பொழுதே நமது அறிவை நமது கீழகங்காரம் அல்லது அசுத்த அகங்காரம் என்னும் தேகான்மாவை நமது உண்மையான **நான்** என்னும் ஆத்துமாவுடன் இணைக்கும் கதிர்வழியாக மேலேற்றி **மேல்மனசைப்போய்** அணுகினால் அப்பொழுது எப்பொழுதும் அழியாத நித்தியமான **நான்** என்னும் சுத்த அகங்காரத்தின் ஞாபகத்தில் நாம் பூலோகத்தில் வந்து வாழ்ந்த பல ஜென்மங்களின் சரித்திரங்கள் முழுவதும் களஞ்சியத்தில் திரவியஞ் சேமித்திருப்பதுபோல் அடங்கியிருக்கக் காண்போம். அப்பொழுது நாம் நாமது "**தந்தை**" யாகிய **மேல்மனசுக்கு** எந்தக்கதிரின் வழியாய் மேலேறக்கூடுமோ அதே கதிரின் வழியாய் மூளை

ஞாபகம் என்னும் ஜாக்கிரத்திற்கு அச்சரித்திரங்களைத் திரும்பக் கொண்டு வந்து அறியக்கூடும். இச்சித்தி பெறும்வரை மனசின் கதிர்களால் விளக்கமடையும் பல ஜென்மங்களின் அறிவுகள் தனித்தனி பிரிந்தேயிருக்கும். இச்சென்மங்களுக்கு இடையே யுள்ள சூனியம் அல்லது பாழ் என்னுங் கடலை ஞாபகங் கடவாது. சிந்திக்கச் சிந்திக்க இது தெளிவாய் விளங்கும்.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

ஹெலெநாம்பாள்.

[முன் தொடர்ச்சி.]

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித்தமராக்கோளல்."

எமிலி விட்ஜேன்ஸ்டேயின் (Prince Emile Wittgenstein) என்னும் இராஜகுமாரர் ருஷியா தேசச் சக்கிரவர்த்தியின் இராணுவத்தில் தலைவனாயிருந்தனர். அவர் ஹேலேநாம்பாளைச் சிறு பிராயமுதல் தெரிந்தவர். அமெரிக்காவில் ஹேலேநாம்பாள் பிரமஞான சங்கத்தை ஸ்தாபிக்குங்காலத்தில் அவர் அவளுடன் கடிதமூலமாய்ச் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். ருஷியாதேசத்தில் டான்யூப் (Danube) நதிக்கருகாமையில் போர் ஆரம்பமாய் அப்பொழுது இருந்ததில் இவ்விராஜகுமாரர் தனது சேனையுடன் யுத்தத்திற்குப் போகவேண்டிய தவசியமாயிற்று. அப்பொழுது பரமிய கொலுக்களில் இவ்விராஜகுமாரருக்கு இந்த யுத்தத்தில் உயிர்ச்சேதம் உண்டாகும் என்றுசொல்லினர். ஹேலேநாம்பாளின் குருநாதன் அப்பொழுது பரமிய கொலுக்களின் தேவதைகள் சொன்னவைபெல்லாம் சுத்தப்பொய்யாய் முடியுமென்றும் இவ்விராஜகுமாரனுக்கு யுத்தத்தில் ஒரு ஆபத்தும் வாராமல் ஆதரிக்கப்படுவாரென்றும் ஆகையால் அவர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லையென்றும் ஹேலேநாம்பாளுக்

குச் சொல்லவும் அவள் இந்த இராஜகுமாரருக்கு இச்சங்கதியைத் தெரிவித்தனள். யுத்தம் ஆரம்பித்தவுடன் இவ்விராஜகுமாரர் யுத்தத்திற்குச் சென்றனர். குண்டுகள் சுற்றிலும் வந்து வெடித்துப் பலர் சேதமாயினும் இவ்விராஜகுமாரர்மீது மாத்திரம் ஒரு குண்டாயினும் வரவேயில்லை. இவர் எவ்விடம் போயினும் இவர் பக்கங்களிலும் மேலும் கீழும் குண்டுகள் வந்து மற்றவர்களைச் சேதஞ் செய்தனவேயன்றி இவருக்கு அணுவளவேனும் அபாயம் நேர்ந்ததேயில்லை. இந்தவிஷயத்தை இவ்விராஜகுமாரரே அக்காலத்தில் ஒரு பத்திரிகைக்கு எழுதி பரமியகொலுக்களின் தேவதைகள் சொல்லுவதில் நம்பிக்கை வைக்கலாகாதென்று கூறினர்.

ஏவல்களினால் சில மனிதர்கள் பீடிக்கப்படுவதுபோல் கன்னிங்ஹாம் என்னும் இளவயதுள்ள ஒரு தனவந்தன் மிகவும் பீடிக்கபபட்டு அதனால் அதிக துன்பமடைந்து கொண்டிருந்தான். குரிச்சிகள், கல்லுகள், கத்திகள் முதலியவைகள் பறந்து வந்துவிழும். இவன் எங்குப்போனாலும் இத்துன்பம அவனைத் தொடர்ந்துகொண்டேயிருந்தது. ஆகையால் இவனுக்கு ஒருவரும் இடம்கொடுப்பதில்லை. இவனுக்கு இத்துன்பம் பொறுக்கமாட்டாமல் பயித்தியம் வந்துவிடும்போலிருந்தது. இவன் ஹேலேனாம்பாளைப்பற்றிகேள்வியுற்று அவளால் ஏதாவது விமோசனம்உண்டாகுமோ பார்ப்போம் என்று ஒருநாள் சாயங்காலம் அவளிருக்கும் இடத்திற்குச் சென்றனன். அவ்விடத்தில் அவளைசுற்றி அனேகஜனங்கள் இருந்தார்கள். இவன் அவள் அருகில் வெகுபிரயாசைப்பட்டுச் சென்றதும் அவள்பக்கத்திலிருந்த சோபா (Sofa) வில் உட்காரும்படி சொல்லி அவன் தனக்கு நேரிட்டிருக்குந்துன்பங்களை விஸ்தாரமாய்க்கூறிவந்ததைப் பொறுமையுடன் கேட்டு அப்பால் இத்துன்பங்கள் துஷ்ட பூதங்களினாலும் அவனுடைய சொந்த அந்தக்கரணச் சக்தியினாலும் உண்டாகின்றனவென்றும், அவைகளை எப்படி நீக்கிகொள்ளலாமென்றும் அப்பூதங்களைச் சுவாதீனம் செய்துகொண்டு இப்பொழுது தனது இச்சையன்றி நடக்கும் செய்கைகளையெல்லாம் தான் வேண்டும்பொழுது எப்படி நட-

க்கும்படி செய்யலாமென்பதையும் விரித்துவிளக்கினள். இவன் இவைகளெல்லாங்கேட்டுத் தம்மால் தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டு அவள் வெறும் வேஷக்காரி அல்லது பயித்தியகாரியாயிருக்கவேண்டும் என்று தன் மனத்தில் தீர்மானித்துக்கொண்டான். ஹெலெநாம்பாளோ அவனுக்குச்சொல்லவேண்டியவைகளைச்சொல்லிவிட்டு ஒரு பெரிய வித்துவானிடம் டார்வின் என்பவருடைய பரிணாமவாதமுறையை (Darwin's System of Evolution) ப்பற்றி வெகு உற்சாகத்துடன் தர்க்கித்துக்கொண்டிருந்தாள். சற்றுநேரம்பொறுத்து இத்தர்க்கத்தின்மத்தியில் நிறுத்திவிட்டு கன்னிங்ஹாம் என்பவனிடம் திரும்பி "நல்லது இருக்கட்டும், கன்னிங்ஹாம், நீ இதெல்லாம் கள்ளம் என்றல்லவா எண்ணுகின்றாய். அது கள்ளமன்றென்று உனக்கிஷ்டமிருக்கும்பக்ஷத்தில் நான் உனக்கு ருசுப்படுத்திக்காட்டுகிறேன். இப்பொழுது உனக்கிஷ்டமானது எதுவேண்டுமோ அதைச்சொல். உனக்கு வேண்டியதைக் கெட்டியாய் வெளியில் சொல்லாமலே உன்மனத்தில் எண்ணிக்கொள். அஃது உனக்குக் கிடைக்கும்' என்றனள். அப்பொழுது அவன் ஒரு ரோஜாப்புஷ்பத்தை மனத்தில் எண்ணிக்கொண்டனன். அவ்வறையில் புஷ்பங்களே கிடையா ஆகையால் அவன் அப்படி எண்ணினன். அவன் மனத்தில் இவ்வெண்ணம் உதித்துநின்றதும் அவன் மேலேபார்த்தான். அவனுக்கு வெகு ஆச்சரியமுண்டாகும்படி அவ்வறையின்முகட்டில் ஒரு நன்றாய் மலர்ந்த ரோஜாப்புஷ்பந் தோன்றி அஃது இவனுக்குநேராய்க் கீழிறங்கி இவன் உடுப்பின் தெறி அல்லது பொத்தான் கொளுவுந்துவாரத்தில் அந்தப்புஷ்பத்தின் காம்பு புகுந்து நின்றுகொண்டது. அப்புஷ்பத்தை அவன் எடுத்துப்பார்க்க அது அப்பொழுதுதான் கொய்தமலராயிருந்தது. பனித்துளிகள் அப்புஷ்பத்தின் இதழ்களிலும் கீழேயிருந்த இலைகளிலும் தொங்கிக்கொண்டிருந்தன. தான் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டுச் சற்றும் பெயராத ஹெலெநாம்பாள் அவனுடைய ஆச்சரியத்தைப் பார்த்து பூதங்களைச் சுவாதீனஞ்செய்து கொண்ட மனிதனுக்கு இவ்வித அற்புதங்கள் செய்வது குழந்தைகளின் விளையாட்டைப்போல் மிகவும் சுலபம் என்றனள்.

ஹெலேநாம்பாள் பிரமஞானக்கொள்கையின் மேல் நம்பிக்கையில்லாத தன்னுடைய சிநேகியாகிய ஒருமாதுக்கு ஒருநாள் ஒருகழுததில் அணியும் தாழ்வடம் கொடுத்து "இதை நீயேயணிந்து கொள். வேறுயாருக்காவது இதைக்கொடுத்தால் இதுமறைந்துபோய்விடும்" என்றனள். அம்மாது அம் மணியை வாங்கி ஒருவருஷம் வரை தரித்துக்கொண்டிருந்தாள். அப்பால் அவள் அவவூரைவிட்டு வேறு ஊருக்குச்சென்றனள். அவ்விடத்தில் அவள் ஆண் குழந்தை நோயினல் பிடிக்கப்பட்டிருந்தவன் இந்தச்சரம் வேணடுமென்று அழுதான். முதலில் கொடுக்கச்சற்றுமயங்கினள். அப்பால் தன்னுடைய மூடநம்பிக்கையைநோக்கிச் சிரித்துக்கொண்டு அம் மணியைக் கழற்றிக் குழந்தையிடம் கொடுத்தாள். குழந்தை அதைத்தன்கழுத்தில் போட்டுக்கொண்டு அழுவதைவிட்டுச் சந்தோஷமடைந்தான். தாயானவள் தன் வீட்டு வேலையைப் பார்க்க அப்பாற் சென்றனள். சற்று நேரத்திற்கெல்லாம் குழந்தை அழ ஆரம்பித்தான். தாயார் ஓடிவந்து பார்க்க அவன் தன் கழுத்திலணிந்திருந்த மணியை வெகு விரைவாய்ப் பிடுங்கியெறிய பிரயத்தனஞ் செய்து கொண்டிருந்தான். உடனே தாயானவள் அந்த மணியைக் கழுத்தினின்றும் கழற்றினள். அப்பொழுது அம்மணிகள் வெகு சூடாய் பாதி உருகிப் போயிருக்கவும் தன் குழந்தையின் கழுதது வெந்து புணணாகவு மிருக்கக்கண்டனள்.

இப்படி யெல்லாம் அற்புதங்கள் பல செய்து காட்டிப் போதித்து அமெரிக்கா தேசத்தவர்களில் வெகு உன்னத புத்தியும் நுட்ப அறிவுமுள்ள பலரைத் திருத்தியும் அவர்களைச் சரியான கொள்கைக்குத்திருப்பியும் கொஞ்சகாலம் அங்கிருந்து அப்பால் நமது இந்தியா தேசத்துச் சனஙகளும் தங்கள் மதாசாரங்களையும் கொள்கைகளையும் கைநழுவ விட்டு லௌகிக காரியங்களிலேயே பூரணமாய் மூழ்கியிருப்பதைக் கருதி அவர்களையும் சீர்திருத்திச் சரியானவழியில் நடத்துவிக்க வேண்டுமென்னும் பெருங் கருணையுடன் இத்தேசம்வர உத்தேசித்தனள்.

[இன்னும் வரும்.]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

இராமேசுரத் திருப்பணி விசேடம்.

யாம் சமீபத்தில் சேதுயாத்திரைபோய்வந்தோம். இராமேசுரத்தில் சிவாலயத்திருப்பணிவேலை நன்கு நடக்கின்றது. தற்காலத்தில் சிவாலயத்திருப்பணி என்று கூறினால் இதை நடத்துபவர் நாட்டுக்கோட்டைநகரத்தார்களே என்பது தானே விளங்கும். இவ்விஷயத்தில் கண்ணுங்கருத்துமாயிருந்து பக்தி சிரத்தையோடு பெரும்பொருள் செலவிட்டுச் சிவபுண்ணியத்தைக் கொள்ளைகொள்பவர் இவர்களையன்றி வேறுயாவர்? வடதிசையிற் காசியும் தென்றிசையில் சேதுவும் ஒப்புயர்வில்லாத தலங்களாம். இங்ஙனம் சிறப்பமைந்த இராமேசுரம் தேவஸ்தான விசாரணை கர்த்தராக இருக்கும் தேவிகோட்டை ஜமீந்தார் ஸ்ரீமாந் அள. அரு. ராம. அருணசலஞ் செட்டியாரவர்கள் சிவபத்தி அடியார்பத்தி ஈகைமுதலிய சகலநற்குணங்களும் அமையப்பெற்றவர். தமிழ் விற்பத்தி மிகவுங்கொண்டவர். சாந்தசீலர். (இத்தகைய பிரபுசிகாமணியைத் தெரிந்தெடுத்து இத்தல விசாரணையைத் தந்த மதுரைஜில்லா கலெக்டர்துரையவர்களது மதிவலிமை வியக்கற்பாலதே.) இவர்கள் இத்தலத்திருப்பணி வேலையை நடாத்தற்குத்தக்கவர் யார் என்று தேடி வேதாந்த சித்தாந்த நூலறிவிற்சிறந்து அறிந்தவாறு நடந்து சிவபுண்ணியமே திருவெனக்கொண்டவரும், சிற்பநூல்விதிகளை நன்கறிந்தவருமாகிய ஸ்ரீமாந் நா. பெ. நா. மு. முத்துராமையா என்னும் முத்துராமன்செட்டியாரவர்களைக் கொண்டு ஊக்கத்துடன் நடாத்துகின்றார்கள்.

இந்த முத்துராமையா அவர்களை யாம் பலகாலமாக அறிவேம். தயை சாந்தமாதிய பல சுகுணங்களும் வாய்ந்தவர். உத்தமச்சிவபத்தர். இவர்கள் அவ்விடத்தேயிருந்து திருப்

பணிவேலையைச் சிறப்புற நடாத்தி வருகின்றனர். பதினைந்துவருடகாலமாக இல்லாதிருந்த அநேகவித வாகனங்களும் வானத்தையளாவிய இராஜகோபுரமும், பற்பல விடுதிகளும், நகரவிடுதியும் முடிந்துள்ளன. இவற்றின் வேலைப்பாடுகளைக் கண்டவரே முத்துராமையா அவர்களின் நூலறிவையும், இயற்கையறிவையும் நன்குணர்வர்.

"இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந் ததனை யவன்கண் விடல்" என்ற திருவாக்கின்படி இப்பணிக்கு இவர்களைக் கண்டமைத்த ஸ்ரீமாந் அள. அரு. ராம. அருணாசலஞ்செட்டியாரவர்களது மதிவலிமையும் ஆராய்ச்சியும் மெச்சத்தக்கனவேயாம்.

"நாட்டுக்கோட்டை நகரத்தார் என்றபோதே அரசர்க்குரிய நாடு, கோட்டை, நகர் என்பன இவர்கட்கே உரிமைவாய்ந்து நிற்றல் அறியப்படும். ஆதலின் இவர்களே தற்காலம் தமிழ் மன்னராக விளங்குகின்றார்கள்" என்று கலியுக கர்ணனாக இருந்த ஸ்ரீமாந் பாற்கரசேதுபதி மஹாராஜா அவர்கள் திருவாடானைக் கும்பாபிஷேக காலத்தில் பிரசங்கமாரி பொழிந்தாரென முன்னொருசமயம் இவ்விவேகபாநுவில் நண்பரொருவர் எழுதியிருந்ததை யாவரும் அறிந்திருத்தல்கூடும்.

இத்தகைய நகரத்தாருக்கும் ஸ்ரீமாந் ஜமீந்தார் அள. அரு. ராம. அருணாசலஞ்செட்டியாரவர்கட்கும், ஸ்ரீமாந் நா. பே. நா. மு. முத்துராமையா அவர்கட்கும் நீடிய ஆயுசும் சிந்தித மனோரத சித்தியும் தந்தருளும்படி ஸ்ரீ ராமநாதசுவாமி திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றாம். சுபம். சுபம்.

இங்ஙனம்

மு. ரா. அருணாசலக்கவிராயர்,

சேற்றூர் சமஸ்தானவித்துவான்.

மதுரை பிரமஞ்ஞான சபையின் 1904௵ ரிபோர்டு.

இச்சபை ஏற்பட்டு 21 வருஷங்களாகின்றன. 1904௵ முடிவில் இதன்கண் 61 மெம்பர்களிருந்தார்கள். இதன் அருமைப் புஸ்தகசாலையில் ஸம்ஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் என்ற மூன்று பாஷைகளிலும் 1834 புஸ்தகங்களிருக்கின்றன. இவ்வருஷத்தில் இதன் வரவு செலவு முறையே ரூ 1228—3—9 ரூ 1174—3—10; பாக்கி யிருப்பு ரூ 53—15—11.

ஹிந்து பெ[illegible]கென்று ஒரு பெண்பாடசாலை ஏற்படுத்தியதும், சில [illegible]ருத பாடசாலை மாணவர்களைப் பரீக்ஷித்துப் பரிசளித்ததும், சென்னை ஹைகோர்ட்டு வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் கொடுத்த நன்கொடை ரூ 350-ஐக்கொண்டு ஓர் அற்புதக்காட்சிக்கண்ணாடியந்திரம் வாங்கினதும், பொதுஜன உபயோகார்த்தமாக வகைக்கு 3000 பிரதிவீதம் அறுவகைத் துண்டுப்பத்திரிகை அச்சிட்டு வெளிப்படுத்தியதும் இவ்வருஷத்தில் இச்சபையார் செய்த வேலைகளில் முக்கியமாம்.

பெண்பாடசாலைக்கென்று வசூல் செய்த ரூ 3532-யும் சேர்த்து இச்சபைக்குத் தற்காலம் முதல் தொகை ரூ 8678 கையிருப்பாகிறது. இது வட்டிக்குப் போடப்பட்டிருக்கிறது. இதனை இவ்வளவு மேன்மைக்குக் கொணர்வதில் பிரம்மஸ்ரீ ப. நாராயண ஐயர் அவர்கள் செய்த அரிய பெரிய முயற்சியும் அவருக்கு ஊன்றுகோல் போல் நின்று உதவி புரிந்த பிரம்மஸ்ரீ ஏ. அரங்கசாமி ஐயர் அவர்களின் ஊக்கமும் உழைப்பும் மிகப் பாராட்டத் தக்கன. இச்சபை மென்மேலும் தழைத்தோங்கப் பகவத் கிருபை உண்டாவதாக.

பத்திராதிபர்.

பத்திரிகை வரவு.

சுதேசி:—இது சென்னையில் வாரம் இருமுறைவெளிப்படும் நன்னடைச் சமாசாரப்பத்திரிகை. பலதேசவர்த்தமானங்களையும் நன்கு தெரிவிப்பது. பத்திராதிபர் மகா-௱-௱-ஸ்ரீ சங்கரலிங்கம்பிள்ளையவர்கள் பீ. ஏ. இவர் பல வருஷங்களாகப்பத்திரிகைகட்கு எழுதுவதே தொழிலாகவுடையர். இதனாலே இதன்சிறப்புவிளங்கும். வருஷசந்தா ரூபா 5—0—0 தான்.

இந்துவர்த்தமானி:—இது நாகபட்டினத்தில் [illegible] இருமுறைவெளிப்படும் சமாசாரப்பத்திரிகை. இதன் வருஷசந்த[illegible]பா 2—0[illegible]—0. நல்லவிஷயங்கள் பல எழுதப்பெறுகின்றன. பத்திரிகை [illegible]யுளது.

தென்னிந்தியாவர்த்தமானி இது தஞ்சைமாநகரினின்று பிரதி குருவாரந்தோறும் வெளிப்படும் சமாசாரப் பத்திரிகை. இதில் வியவசாய சம்பந்த விஷயங்கள் பலவும் நம்நாட்டுக்கேற்ற பல தேசவர்த்தமானங்களும் எழுதப்பெறுகின்றன. வருஷசந்தா ரூபா 4—0—0 தான்.

லோகவர்த்தமானி:—இது திரிசிரபுரத்தில் வாரம் இருமுறை வெளிப்படும்சமாசாரப்பத்திரிகை. வருஷசந்தா ரூபா 7—8—0. இதில் வர்த்தமானங்களுடன் விநோதக்குறிப்புக்கள் பத்திரிகைகள்தோறும்எழுதப்பெறுகின்றன. பத்திரிகை மிக அழகாயுளது.

இந்த நான்கு பத்திரிகைகளும் நம்பாநுவுக்கு மாற்றுப்பத்திரிகைகளாக அனுப்பியமைக்காக அவ்வப்பத்திராதிபர்கட்கு வந்தனமளிக்கின்றோம். இப்பத்திரிகைகளால் நம்தேசத்துக்குப் பல நன்மைகள் விளையும் என்பதற்கையமில்லை. தமிழ்நாட்டார் இவற்றை ஆதரிப்பார்களாக.

மதுவிலக்குத்தூதன்:—இது சென்னை தேனாம்பேட்டையில் வெளிப்படும் மாதாந்தப்பத்திரிகை. நம்நாட்டில் குடியினால் விளையுந் தீங்குகள் பலவே. அதைப்பற்றி முக்கியமான வேறு பல விஷயங்களுடன் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்பெறுகின்றது. வருஷ சந்தா ரூபா 1—8—0.

பத்திராதிபர்.

சைவ பரிபாஷை.

[முன் தொடர்ச்சி]

இவ்விடத்து அநுசரித்த புத்தி அநுமானமென்கிற காரணப்பெயராலே வியாப்தியோடு கூடிய பக்கத்தன்மையின் ஞானத்தாலுண்டான * பரோக்ஷார்த்தத்தை விஷயமாகவுடைய சிற்சத்தியே அநுமானமாகும். அதற்குக் காரணமானலிங்க ஞானம் பிரமேயமாதலால் அநுமானமாகமாட்டாது. அப்படியே சொல்லியிருககின்றது. அதில் வியாப்தியாவது சாத்தியத்திற்கும் சாதனத்திற்கும் உபாதியில்லாத சம்பந்தம். அப்படியே சொல்லியிருக்கின்றது.

எப்படியென்னில் அக்கினியைக்கொண்டு புகையைச்சாதிக்குமிடத்து ஈரவிறகின் சேர்க்கை அது சாத்தியமான புகையிருக்குமிடத்திலெல்லா மிருப்பதால் சாத்தியவியாபகமாயும், அக்கினியுள்ள இரும்புமழுவில் இல்லாமையால் சாதன வியாபியாயுமிருக்கின்றது. இது நிச்சயிக்கப்பட்டவுபாதி.

சந்தேகிக்கப்பட்ட வுபாதியாவது:—மைத்திரி யென்பவளின் பிள்ளையா யிருப்பதைக் கொண்டு கருமையைச் சாதிக்குமிடத்துச் சாதக பாகத்தா லுண்டாயிருப்பதாகும்.

இந்த வியாப்தியும் அந்நுவய வியாப்தியென்றும வியதிரேக வியாப்தியென்றும் இருவகைத்து.

பொதுவாகச் சாத்தியத்திற்கும் ஏதுவுக்கு முண்டாயிருக்கும் சம்பந்தம் அந்நுவய வியாப்தியாகும். அஃதெங்ஙனமெனில் எங்கே நெருப்பில்லையோ அங்கே புகையுமில்லை. மடுவைப்போல என்பது. இப்படியே ஆகமப்பிரமாண வசனமிருக்கின்றது.

---

*பரோக்ஷம்—புலப்படாத அப்பிரத்தியக்ஷம்.

இந்த அநுமானமும் சுவார்த்தமென்றும் பதார்த்தமென்றும் இருவகைத்து. சுவார்த்தமாவது தானே யறிவதற்குக் காரணமா யிருப்பது. எப்படியென்னில் மகானச முதலான விடத்தில் புகை நெருப்புக்களுக்கு வியாப்தியை நிச்சயித்தபின் மலை முதலான விடத்தில் * வியாப்பியமான தூம ஞானத்தைக் கொண்டு அக்கினியை அநுமித்தலாகும்.

பரார்த்தமாவதுதான் தூமத்தினாலே அக்கினியை அநுமித்தபின் அந்நியனுக்குப் போதிக்கும் பொருட்டு ஐந்து அவயவ வாக்கியங்களைப் பிரயோகிப்பதாகும்.

ஐந்து அவயவ வாக்கியங்களாவன:—பிரதிஞ்ஞை, ஏது, உதாரணம், உபநயம், நிகமனம் என்ற ஐந்து.

அவற்றுள் மலை நெருப்புடையது என்பது பிரதிஞ்ஞை, புகையினாலே என்பது ஏது. எது புகையுடையதோ அதெல்லாம் நெருப்புடையது; மகானசத்தைப்போல என்பது உதாரணம். அப்படியே இதுவும் புகையுள்ளது என்பது உபநயம். ஆதலால் நெருப்புடையதே என்பது நிகமனம்.

இப்படி ஐந்து விதங்களான வாக்கியங்களினாலே அந்நியனும் அக்கினியை நிச்சயிக்கின்றான். அதுதான் பரார்த்தாநுமானம். அப்படியே பௌஷ்கரத்தில் சொல்லியிருக்கின்றது.

அந்த ஏதுவும் கண்டதைச் சாதிப்பதென்றும் காணாததைச் சாதிப்பதென்றும் இருவகைத்து. எப்படியென்னில் குயவனையும் கடகாரியத்தையும ஓரிடத்தில் கண்டு பின்பு வேறிடத்தில் கடத்தைமாத்திரங் கண்டு இது குயவனாலே செய்யப்பட்ட தென்று காணப்பட்ட கர்த்தாவாகிய குயவனைச் சாதிப்பது.

காணாததைச் சாதிக்கும் ஏது இருவகை. இந்திரிய விஷயமானதைச் சாதிப்பதென்பதும், இந்திரிய விஷயமல்லாததைச் சாதிப்பதென்பதும்.

---

* வியாப்பியம்—வியாபிக்கத்தக்கது.

எப்படியென்னில்:—பரிமள விஷேத்தால் புஷ்ப விசேஷத்தையறிவது. புஷபம் இந்திரியவிஷய மாதலால் இது இந்திரியவிஷயமானதைச் சாதிப்பது.

ஒருவன் சொல்லும் வாக்கியத்தைக் கொண்டு அவனது ஞானத்தையறிவது இந்திரியவிஷய மல்லாததைச் சாதிப்பது. ஒருவனுடைய ஞானம் ஒருவனுடைய இந்திரிய விஷயமாகமாட்டாதாகையால் தனது ஞானத்தைக்கொண்டு ஞானசாமானியத்தாலறியவேண்டியது. இப்படியே பிரபஞ்ச காரியத்தையும் அதன் கர்த்தாவையும் ஓரிடத்திற்கண்டு பசுபாச ஞானகோசரனை சிவனைச்சாதிப்பது காணுதலைச்சாதிக்கும் ஏதுவாகும். இப்படியே பசுபாசமாயாகருமாதிகளையும் அறியவேண்டியது.

எவ்விடத்தில் சாத்தியமாவது சாத்தியமான ஜாதியாவது பிரத்தியக்ஷயோக்கியமாகவில்லையோ அவ்விடத்தில் சப்தமாத்திரத்தினுலே யறியப்படும் ஏது வேறென்றுண்டு.

எப்படியெனில்:—இப்போதிருக்கும் போகத்தைக்கொண்டு பூர்வஜன்மபுண்ணியத்தைச் சாதிப்பது. இது சப்தமாத்திரத்தினலே யறியப்படுவது. அந்தச்சாத்தியம் புண்ணியாதி சப்தமின்றி யறியப்படாததலால்.

அந்த ஏது அந்நுவயவியதிரேகி, கேவலாந்நுவயீ, கேவலவியதிரேகி என்று மூன்று விதம்.

அவற்றுள் அந்நுவயவியதிரேகி ஐந்து தன்மையுள்ளது. அவையாவன, பக்ஷத்திலிருக்கை, சபக்ஷத்திலிருக்கை, விபக்ஷத்திலிராமை, பாதையில்லாமை, பிரத்தியக்ஷமில்லாமை.

அவற்றுள் சாத்தியமுண்டோ இல்லையோ என்று சந்தேகித்த இடம் பக்ஷம். சாத்தியமுண்டென்று நிச்சயிக்கப்பட்ட இடம் சபக்ஷம். சாத்தியமில்லையென்று நிச்சயிக்கப்பட்ட இடம் விபக்ஷம். பக்ஷத்திலிருக்கை யாவது:—பக்ஷமாகிய மலைமுதலான இடத்தில் ஏதுவாகிய புகைமுதலானவையிருக்கை. சபக்ஷத்திலிருக்கையாவது:—சபக்ஷமான மகானசாதியில் ஏதுவிரு

க்கை. விபக்ஷத்திவிராமையாவது:—விபக்ஷமாகிய மடுமுதலானவைகளில் ஏதுவிராமை. பாதையில்லாமையாவது:—பக்ஷத்தில் சாத்தியத்தைச்சாதிக்கும்போது வேறு பிரமாணத்தால் அது பாதிக்கப்படாமை. பிரத்தியக்ஷயில்லாமையாவது:—சாத்தியபாவத்தைச் சாதிக்கும்படியான வேறு ஏதுவில்லாமை. இப்படி ஐந்து தன்மையோடு கூடியது அந்நுவயவியதிரேகி.

விபக்ஷமில்லாத ஏது கேவலாந்நுவயி.

சபக்ஷமில்லாத ஏது கேவலவியதிரேகி.

இவ்விரண்டும் நான்கு தன்மையோடுகூடிச் சாத்தியத்தைச் சாதிக்கும்.

இவற்றிற்கு முறையே உதாரணம் வருமாறு;—

மலை நெருப்புள்ளது, புகையுடைமையால், மகானசம்போல் என்பது அந்நுவயவியதிரேகி.

சர்வகாரியமும் கர்த்தாவை அபேக்ஷிக்கின்றது. காரியமாதலால் குலாலனை அபேக்ஷிக்கும் கடம் போல என்பது கேவலாந்நுவயி.

சர்வகாரியமும் சத்தேயாகும். எது செய்யப்படவில்லையோ அது சத்துமன்று; முயற் கொம்புபோல என்பது கேவலவியதிரேகி.

மேற்சொல்லிய பக்ஷத்திலிருக்கை முதலான ஐந்து ஏதுத்தன்மைகளில் ஒன்று இல்லாவிடினும் ஏதுக்களாகமாட்டா. சில தன்மைகளோடு கூடி ஏதுப்போலத் தோற்றுவது ஏது ஆபாசங்கள்.

அவை-அசித்தன், விருத்தன், அனேகாந்திகன், அனத்தியவசிதன், காலாப்தியயாபதிஷ்டன் என்று ஐந்தாம்.

சாத்திய வியாப்தியுள்ள ஏது பக்ஷத்திலிருப்பது சித்தியென்னப்படும். அப்படியில்லாதது அசித்தி யென்னப்படும். அந்த அசித்தியுள்ள ஏது அநேகவிதமாகும். அவையாவன:—

[தொடரும்]